www.shaivism.org

திருமந்திரம் எட்டாம் தன்திரம்

திருச்சிற்றம்பலம்

## 1: உடலிற் பஞ்சபேதம்

2122

காயப்பை யொன்று சரக்குப் பலவுள
(1)மாயப்பை ஒன்றுண்டு மற்றுமோர் பையுண்டு
காயப்பைக் குள்நின்ற கள்வன் புறப்பட்டால்
மாயப்பை மண்ணா மயங்கிய வாறே
(1) மாயப் படைதனில் மற்றுமோர்

2123

அத்தன் அமைத்த உடலிரு கூறினிற்
சுத்தம தாகிய சூக்குமஞ் சொல்லுங்காற்

சத்த பரிச ரூப ரசகந்தம்
புத்திமா னாங்காரம் புரியட்ட காயமே

2124
எட்டினில் ஐந்தாகும் இந்திரி யங்களுங்
கட்டிய மூன்று கரணமு மாயிடும்
ஒட்டிய பாசம் உணர்வது வாகவே
கட்டி யவிழ்த்திடுங் கண்ணுதல் காணுமே

2125
இரதம் உதிரம் இறைச்சிதோல் மேதை
மருவிய வத்தி வழும்பொடு மச்சை
பரவிய சுக்கிலம் பாழாம் உபாதி
உருவம லாலுடல் ஒன்றென லாமே

2126
ஆரே அறிவார் அடியின் பெருமையை
யாரே அறிவார் அங்கவர் நின்றது
யாரே அறிவார் (1)அறுபத்தெட் டாக்கையை
யாரே அறிவார் அடிக்காவ லானதே
(1) அறுபத்தோ

2127
எண்சா ணளவால் எடுத்த வுடம்புக்குட்
கண்கால் உடலிற் கரக்கின்ற கைகளிற்
புண்கால் அறுபத்தெட் டாக்கை புணர்க்கின்ற

நண்பால் உடம்புதன் னாலுடம் பாமே

2128
(1)உடம்புக்கும் நாலுக்கும் உயிராய சீவன்
ஒடுங்கும் பரனோ டொழியாப் பிரமங்
கடந்தொறு நின்ற கணக்கது காட்டி
அடங்கிய அற்றது ஆரறி வாரே
(1) உடம்புகள்

2129
ஆறந்த மாகி நடுவுடன் கூடினால்
தேறிய முவாறுஞ் சிக்கென் றிருந்திடுங்
கூறுங் கலைகள் பதினெட்டுங் கூடியே
ஊறும் உடம்பை உயிருடம் பெண்ணுமே

2130
மெய்யினில் தூல மிகுத்த முகத்தையும்
பொய்யினிற் சூக்கம் பொருந்தும் உடலையுங்
கையினில் துல்லியங் காட்டும் உடலையுங்
ஐயன் அடிக்குள் அடங்கும் உடம்பே

2131
காயுங் கடும்பரி கால்வைத்து வாங்கல்போற்
சேய விடமண்மை செல்லவும் வல்லது
காயத் துகிர்போர்வை யொன்றுவிட் டாங்கொன்றிட்
டேயு மவரென்ன ஏய்த்திடுங் காயமே

2132

நாக முடலுரி போலுநல் லண்டச
மாக நனாவிற் கனாமறந் தல்லது
போகலு மாகும் அரனரு ளாலேசென்
றேகு மிடஞ்சென் றிருபயன் உண்ணுமே

2133

உண்டு நரக சுவர்க்கத்தில் உள்ளன
கண்டு விடுஞ்சூக்கங் காரண மாச்செலப்
பண்டு தொடரப் பரகாய யோகிபோற்
பிண்டம் எடுக்கும் பிறப்பிறப் பெய்தியே

2134

தானவ னாகிய தற்பரந் தாங்கினோன்
ஆனவை மாற் றிப் பரமத் தடைந்திடும்
ஏனை யுயிர்வினைக் கெய்து மிடஞ்சென்றும்
வானும் நிலனும் புகுந்தும் வருந்துமே

2135

ஞானிக்குக் காயஞ் (1)சிவமாகும் நாட்டிடில்
ஞானிக்குக் காயம் உடம்பே யதுவாகும்
மேனிற்கும் யோகிக்கு விந்துவும் நாதமும்
மோனிக்குக் காயமுப் பாழ்கெட்ட முத்தியே

(1) சிவமே தனுவாகும்

2136

விஞ்ஞானத் தோர்க்கா ணவமே மிகுதனு
(1)எஞ்ஞானத் தோர்க்குத் தனுமாயை தானென்ப
அஞ்ஞானத் தோர்க்குக் கன்மந் தனுவாகும்
மெஞ்ஞானத் தோர்க்குச் சிவதனு மேவுமே
(1) தஞ்ஞானத்

2137

மலமென் றுடம்பை மதியாத ஊமர்
தலமென்று வேறு தரித்தமை கண்டீர்
நலமென் றிதனையே நாடி யிருக்கிற்
பலமுள்ள காயத்திற் பற்றுமிவ் வண்டத்தே

2138

நல்ல வசனத்து வாக்கு மனாதிகள்
மெல்ல விளையாடும் விமலன் அகத்திலே
அல்ல செவிசத்த மாதி மனத்தையும்
மெல்லத் தரித்தார் முகத்தார் பசித்தே

2: உடல்விடல்

2139

பண்ணாகுங் காமம் பயிலும் வசனமும்
விண்ணாம் பிராணன் விளங்கிய சத்தமும்
புண்ணாம் உடலிற் பொருந்து மனத்தையும்
அண்ணாந்து பார்க்க அழியும் உடம்பே

2140

அழிகின்ற வோருடம் பாகுஞ் செவிகண்
கழிகின்ற (1)காலவ் விரதங்கள் தானம்
மொழிகின்ற வாக்கு முடிகின்ற நாடி
ஒழிகின்ற ஊனுக் குறுதுணை யில்லையே
(1) காலம்

2141

இலையா மிடையில் எழுகின்ற காம
(1)முலைவாய நெஞ்சத்து முழ்கும் உளத்துத்
தலையாய மின்னுடல் தாங்கித் திரியுஞ்
சிலையாய சித்தஞ் சிவமுன் னிடைக்கே
(1) முலைவாய்

3: அவத்தைபேதம் — கீழாலவத்தை

2142

ஐயைந்து (1)மத்திமை யானது சாக்கிரங்
கைகண்ட பந்நான்கிற் கண்டங்கனாவென்பர்
பொய்கண் டிலாத புருடனித யஞ்சுழுனை
மெய்கண் டவனுந்தி யாகுந் துரியமே
(1) மத்திமமானது

2143

முப்பதோ டாறின் முதல்நனா ஐந்தாகச்
செப்பதி னான்காய்த் திகழ்ந்திரண் டொன்றாகி
அப்பதி யாகும் நியதி முதலாகச்
செப்புஞ் சிவமீறாய்த் தேர்ந்துகொள் ளீரே

2144

இந்திய மீரைந் தீரைந்து மாத்திரை
மந்திர மாய்நின்ற மாருதம் ஈரைந்தும்
அந்தக் கரணம் ஒருநான்கும் ஆன்மாவும்
பந்தவச் சக்கரப் பாலது வாகுமே

2145

பாரது பொன்மை பசுமை யுடையது
நீரது வெண்மை செம்மை நெருப்பது
காரது மாருதங் கருப்பை யுடையது
வானகந் தூம மறைந்துநின் றாரே

2146

பூதங்கள் ஐந்தும் பொறியவை (1)ஐந்துளும்
ஏதம் படஞ்செய் திருந்த புறநிலை
ஓது மலங்குண மாகுமா தாரமோ
டாதி யவத்தைக் கருவிதொண் ணூற்றாறே
(1) ஐந்தும்
(1) ஐயைந்தும்

2147

இடவகை சொல்லில் இருபத்தஞ் சானை
படுபர சேனையும் பாய்பரி ஐந்தும்
உடையவன் மத்திமை யுள்ளூறு நால்வர்
அடைய நெடுங்கடை ஐந்தொடு நான்கே

2148

உடம்பும் உடம்பும் உடம்பைத் தழுவி
உடம்பிடை நின்ற உயிரை அறியார்
(1)உடம்பொ டுயிரிடை நட்பறி யாதார்
மடம்புகு நாய்போல் மயங்குகின் றாரே
(1) உடம்போ டுயிரின் உடம்பறி

2149

இருக்கின்ற வாறொன் றறிகிலர் ஏழைகள்
முருக்கு மசபையை மாற் றி முகந்து
கருக்கொண்டு காமாரி சார முகந்தேர்ந்
துருக்கொண்டு தொக்க உடலொழி யாதே

2150

ஒளித்திட் டிருக்கும் ஒருபதி னாலை
அளித்தனன் என்னுள்ளே ஆரியன் வந்து
அளிக்குங் கலைகளி னாலறு பத்து
ஒளித்திட்டு வைத்தான் ஒடுங்கிய சித்தே

2151

மண்ணினில் ஒன்று மலர்நீரு மருங்காகும்
பொன்னினில் அங்கி புகழ்வளி யாகாயம்
மன்னு மனோபுத்தி யாங்காரம் ஓரொன்றாய்
(1)உன்னின் முடிந்த தொருபூத சயமே
(1) உன்னி முடிந்தது பூத சமயமே

2152

முன்னிக் கொருமகன் (1)மூர்த்திக் கிருவர்
வன்னிக்கு மூவர் வதுவைக்கு நால்வர்
கன்னிக்கு(2)ப் பிள்ளைகள் ஐவர்மு னாளில்லை
(3)கன்னியைக் கன்னியே காதலித் தாளே
(1) முத்திக் கிருவராம்
(2) ஐவர்மின் னாளில்லை கன்னியை
(3) கன்னிக்குக் கன்னி

2153

கண்டகன வைந்துங் கலந்தனதா னைந்துஞ்சென்
றுண்டன நான்கும் ஒருங்கே உணர்ந்தபின்

பண்டைய தாகிப் பரந்த வியாக்கிரத்
தண்டமுந் தானாய் அமர்ந்துநின் றானே

2154
நின்றவன் (1)நிற்கப் பதினாலிற் பத்துநீத்
தொன்றிய அந்தக் கரணங்கள் நான்குடன்
மன்று கலந்த மனைவாழ்க்கை வாதனை
கன்றிய கண்டத்திற் கண்டான் கனவதே
(1) நிற்பப்

2155
தான மிழந்து தனிபுக் கிதயத்து
மான மழிந்து மதிகெட்டு மாலாகி
ஆன விரிவறி யாவவ் வியத்தத்தின்
மேனி யழிந்து சுழுத்திய தாமே

2156
சுழுனையைச் சேர்ந்துள மூன்றுடன் காட்சி
கெழுமிய சித்தம் பிராணன்றன் (1)காட்சி
ஒழுகக் கமலத்தின் உள்ளே யிருந்து
விழுமப் பொருளுடன் மேவிநின் றானே
(1) போதம்

2157
தானத் தெழுந்து தருக்குந் துரியத்தின்
வானத் தெழுந்துபோய் வையம் பிறகிட்டுக்

கானத் தெழுந்த கருத்தின் தலையிலே
ஊனத் தவித்தைவிட் டுமேனின் றானே

2158

ஊமை யெழுத்தொடு பேசும் எழுத்துறில்
ஆமை (1)யகத்தினில் அஞ்சும் (2)அடங்கிடும்
(3)ஓமய முற்றது வுள்ளொளி பெற்றது
(4)நாமய மற்றது நாமறி யோமே
(1) யகத்துடன்
(2) ஒடுங்கிடும்
(3) ஊமைய மற்றது
(4) நாமைய

2159

துரிய மிருப்பதுஞ் சாக்கிரத் துள்ளே
நரிகள் பதினாலு நஞ்சுண்டு செத்தன
பரிய புரவியும் (1)பாறிப் பறந்தது
துரிய (2)மிறந்திடஞ் சொல்லவொண் ணாதே
(1) பாரிற் பரந்தது
(2) மிருந்திடம்

2160

மாறா மலமைந்தான் மன்னு மவத்தையின்
வேறாய மாயா தநுகர ணாதிக்கிங்
கீறாகா தேஎவ் வுயிரும் பிறந்திருந்
தாறாத வல்வினை யாலடி யுண்ணுமே

2161

உண்ணுந்தன் னூடாடா தூட்டிடு மாயையும்
அண்ணல் அருள்பெற்ற முத்திய தாவது
நண்ண லிலாவுயிர் ஞானத்தி னாற்பிறந்
தெண்ணுறு ஞானத்தின் நேர்முத்தி எய்துமே

2162

அதிமுட நித்திரை யாணவ நந்த
அதனா லுணர்வோ னருங்கன்ம முன்னித்
திதமான கேவல மித்திறஞ் சென்று
பரமாகா வையவத் தைப்படு வானே

2163

ஆசான்முன் னேதுயில் மாண வகரைத்
தேசாய தண்டால் எழுப்புஞ் செயல்போல்
நேசாய வீசனு நீடாண வத்தரை
ஏசாத மாயாடன் னாலே எழுப்புமே

2164

மஞ்சொடு மந்தா கினிகுட மாமென
விஞ்சறி வில்லோன் விளம்பு மிகுமதி
எஞ்சலி லொன்றெனு மாறென இவ்வுடல்
அஞ்சுணு மன்னனன் றேபோ மளவே

2165

படியுடை மன்னவன் பாய்பரி ஏறி
வடிவுடை மாநகர் தான்வரும் போது
(1)அடியுடை ஐவரும் அங்குறை வோருந்
துடியில்லம் பற் றித் துயின்றனர் தாமே
(1) வடியுடை
(1) படியுடை

2166
நேரா மலத்தை நீடைந் தவத்தையின்
நேரான வாறுன்னி நீடு நனவினில்
நேரா மலமைந்து நேரே தரிசித்து
நேராம் பரத்துடன் நிற்பது நித்தமே

4: மத்திய சாக்கிராவத்தை

2167
சாக்கிர சாக்கிரந் தன்னில் திரோதாயி
சாக்கிர சொப்பனந் தன்னிடை மாமாயை
சாக்கிரந் தன்னிற் சுழுத்திதற் காமியஞ்
சாக்கிரந் தன்னில் துரியத்து மாயையே

2168

மாயை எழுப்புங் கலாதியை மற்றதின்
நேய விராகாதி ஏய்ந்த துரியத்துத்
தோயுஞ் சுழுனை கனாநனா வுந்துன்னி
ஆயின னந்தச் சகலத்து ளானே

2169

மேவிய அந்தகன் விழிகட் குருடனா
மாவயின் முன்னடிக் காணு மதுகண்டு
மேவுந் தடிகொண்டு (1)சொல்லும் விழிபெற
மூவயி னான்மா முயலுங் கருமமே
(1) செல்லும்

2170

மத்திம மொத்த சிலந்தி வலயத்துள்
ஒத்தங் கிருந்து உயிருண்ணு மாறுபோல்
அத்தனும் ஐம்பொறி யாடகத் துள்நின்று
சத்த முதல் ஐந்துந் தானுண்ணு மாறே

2171

வைச்சன வச்சு வகையிரு பத்தஞ்சு
முச்சு முடனணை வானொரு வன்னுளன்
பிச்சன் பெரியன் பிறப்பிலி என்றென்று
நச்சி யவனருள் நானுய்ந்த வாறே

2172

நாலா றுடன்புருட னற்றத் துவமுடன்
வேறான ஐயைந்து மெய்ப்புரு டன்பரங்
கூற வியோமம் பரமெனக் கொண்டனன்
வேறான நாலேழு வேதாந்த தத்வமே

2173
ஏலங்கொண் டாங்கே இடையொடு பிங்கலை
கோலங்கொண் டாங்கே குணத்தி னுடன்புக்கு
மூலங்கொண் டாங்கே முறுக்கிமுக் கோணிலுங்
காலங்கொண் டானடி காணலு மாமே

2174
நாடிகள் பத்தும் நலந்திகழ் வாயுவும்
ஓடிய காலில் ஒடுங்கி யிருந்திடுங்
கூடிய காமங் குளிக்கும் இரதமும்
நாடிய நல்ல மனமும் உடலிலே

2175
அவன அவ அழிவ அழிவன
போவன போவ புகுவ புகுவன
காவலன் பேர்நந்தி காட்டித்துக் கண்டவன்
(1)ஏவன செய்யும் (2)இலங்கிழை யோனே
(1) ஏவனெவன்
(2) இளங்கிளை

2176

பத்தொடு பத்துமோர் மூன்றும் பகுதியும்
உய்த்த துரியமும் உள்ளுணர் காலமும்
மெய்த்த வியோமமு மேலைத் துரியமுந்
தத்துவ நாலே ழெனவுன்னத் தக்கதே

2177
விளங்கிடு முன்னூற்று முப்பதோ டொருபான்
தளங்கொ ளிரட்டிய தாறு நடந்தால்
வணங்கிடு மைம்மலம் வாயு வெழுந்து
விளங்கிடு மவ்வழி தத்துவ நின்றே

2178
நாலொரு கோடியே நாற்பத்தெண் ணாயிர
மேலுமோ ரைன்னூறு வேறா யடங்கிடும்
பாலவை தொண்ணூறோ டாறுட் படுமவை
கோலிய ஐயைந்து ளாகுங் குறிக்கிலே

2179
ஆகின்ற தொண்ணூறோ டாறும் பொதுஎன்பர்
ஆகின்ற வாறா றருஞ்சைவர் தத்துவம்
ஆகின்ற நாலேழ் வேதாந்தி (1)வயிணவர்க்
காகின்ற நாலாறை யைந்துமாயா வாதிக்கே
(1) வைணவர்க்

2180
தத்துவ மானது தன்வழி நின்றிடில்

வித்தக னாகி விளங்கி யிருக்கலாம்
பொய்த்தவ மாமவை போயிடு மவ்வழி
தத்துவ மாவ தகார எழுத்தே

2181
அறிவொன் றிலாதன ஐயேழு மொன்றும்
அறிகின்ற என்னை அறியா திருந்தேன்
அறிகின்றாய் நீயென் றருள்செய்தார் நந்தி
அறிகின்ற நானென் றறிந்துகொண் டேனே

2182
சாக்கிர சாக்கிர மாதி (1)தனில் ஐந்தும்
ஆக்கு மலாவத்தை யைந்து நனவாதி
போக்கி யிவற்றொடும் பொய்யன வாறாறு
நீக்கி நெறிநின்றோன் றாகியே நிற்குமே
(1) நிலையைந்தும்

2183
ஆணவ மாதி மலமைந் தலரோனுக்
காணவ மாதிநான் காமாற் கரனுக்கு
ஆணவ மாதிமுன் றீசர்க் கிரண்டென்ப
ஆணவ மொன்றே சதாசிவற் காவதே

5: அத்துவாக்கள்

2184

தத்துவம் ஆறாறு தன்மனு வேழ்கோடி
மெய்த்தகு வன்னம் ஐம் பானொன்று மேதினி
ஒத்திரு நூற் றிரு பான்நான்கெண் பானொன்று
வைத்த பதங்கலை யோரைந்தும் வந்தவே

2185

நாடிய மண்டல மூன்று நலந்தெரிந்
தோடு மவரோ டுள் ளிரு பத்தைஞ்சுங்
கூடுவர் கூடிக் குறிவழி யேசென்று
தேடிய பின்னர்த் திகைத்திருந் தார்களே

2186

சாக்கிர சாக்கிர மாதித் தலையாக்கி
ஆக்கிய தூல மளவாக்கி அதீதத்துத்
தாக்கிய (1)வன்பான தாண்டவஞ் சார்ந்தது
தேக்குஞ் சிவமாதல் ஐந்துஞ் சிவாயமே
(1) வன்பான்

## 6: சுத்த நனவாதி பருவம்

2187

நனவாதி தூலமே சூக்கப் பகுதி
அனதான ஐயைந்தும் விந்துவின் சத்தி
தனதா முயிர்விந்து தானின்று போந்து
கனவா நனவிற் கலந்ததிவ் வாறே

2188

நனவில் அதீதம் பிறந்தார் கிடந்தார்
நனவில் துரியம் (1)நிகழ்ந்தார் தவழ்ந்தார்
நனவிற் (2)சுழுத்தி நடந்தார் வளர்ந்தார்
நனவிற் கனவோட னன்செய்தி யானதே
(1) நகர்ந்தார்
(2) சுழுனை

2189

செறியுங் கிரியை சிவதத் துவமாம்
பிறிவிற் சுகயோகம் பேரருள் கல்வி
குறிதற் றிருமேனி குணம்பல வாகும்
அறிவில் சராசரம் அண்டத் தளவே

2190

அதி பரஞ்சிவஞ் சத்தி சதாசிவம்

ஏதமில் ஈசன்நல் வித்தியா தத்துவம்
போதங் கலைகால நியதிமா மாயை
நீதியீ றாக நிறுத்தினன் என்னே

2191
தேசு திகழ்சிவஞ் சத்தி சதாசிவம்
ஈசன் அனல்வித்தை இராகங் கலைகால
மாசகல் வித்தை நியதி மகாமாயை
ஆசில் புருடாதி ஆன்மாவீ (1)றாறே
(1) ராறே

2192
ஆணவ மாயையுங் கன்மமு மாமலங்
(1)காணு முளைக்குத் தவுடுமி யான்மாவுந்
தாணுவை யொவ்வாமற் றண்டுல மாய்நிற்கும்
பேணுவாய் மற்றுநின் பாசம் பிரித்தே
(1) காண முளையும் தவிடு

2193
பசுக்கள் பலவண்ணம் பாலொரு வண்ணம்
பசுக்களை மேய்க்கின்ற ஆயன் ஒருவண்ணம்
பசுக்களை மேய்க்கின்ற ஆயன்கோல் போடிற்
பசுக்கள் தலைவனைப் பற் றி விடாவே

2194
உடலிந் தியமனம் ஒண்புத்தி சித்தம்

அடலோன் றகந்தை அறியாமை மன்னிக்
கெடுமவ் வுயிர்மயல் மேலுங் கிளைத்தால்
அடைவது தானேழ் நரகத்து ளாயே

2195

தற்றெரி யாத வதீதந்தற் காணவஞ்
சொற்றெரி கின்ற துரியஞ்சொற் காமியம்
பெற்ற சுழுத்திப்பின் பேசுறுங் காதலா
மற்றது வுண்டிக் கனநன வாதலே

2196

நனவிற் கனவில்லை ஐந்து நனவிற்
கனவிலாச் சூக்குமங் காணுஞ் சுழுத்தி
தனலுண் பகுதியே தற்கூட்டு மாயை
நனவிற் றுரிய ததீதந் தலைவந்தே

2197

ஆறறில் ஐயைந் தகல நனாநனா
வாறா மவைவிட வாகு நனாக்கனா
வேறான ஐந்தும் விடவே நனாவினில்
ஈறாஞ் சுழுத்தி யிதின்மாயை தானே

2198

மாயையில் வந்த புருடன் துரியத்தில்
ஆய முறைவிட் டதுவுந்தா னன்றாகிச்
சேயகே வலவிந் துடன்செல்லச் சென்றக்கால்

ஆய தனுவின் பயனில்லை யாமே

2199

அதீதத் துரியத் தறிவனாம் ஆன்மா
அதீதத் துரிய மதனாற் புரிந்தால்
அதீதத் தெழுந்தறி வாகிய மானன்
முதிய அனலிற் றுரியத்து முற்றுமே

2200

ஐயைந்து பத்துடன் ஆனது சாக்கிரங்
கைகண்ட ஐயைந்திற் கண்டங் கனாஎன்பர்
பொய்கண்ட மூவர் புருடர் சுழுனையின்
மெய்கண் டவனுந்தி மேவல் இருவரே

2201

புரியட் டகமே பொருந்தல் நனவு
புரியட் டகந்தன்னின் மூன்று கனவு
புரியட் டகத்தில் இரண்டு சுழுத்தி
புரியட் டகத்தொன்று புக்கல் துரியமே

2202

நனவின் நனவு புலனில் வழக்கம்
நனவிற் கனவு நினைத்தல் மறத்தல்
நனவிற் சுழுத்தியுண் ணாடல் இலாமை
நனவில் துரிய மதீதத்து நந்தியே

2203

கனவின் நனவுபோற் காண்டல் நனவாங்
கனவினிற் கண்டு மறத்தல் கனவாங்
கனவிற் சுழுத்தியுங் காணமை காணல்
அனுமாதி செய்தலி லான துரியமே

2204

சுழுத்தி நனவொன்றுந் தோன்றாமை தோன்றல்
சுழுத்தி கனவதன் உண்மை சுழுத்தியிற்
சுழுத்தி யறிவறி வாலே (1)யழிகை
சுழுத்தி துரியமாஞ் சொல்லறும் பாழே
(1) யறிகை

2205

துரிய நனவா (1)மிதமுணர் போதந்
துரியக் கனவா மகமுணர் போதந்
துரியச் சுழுத்தி வியோமந் துரியந்
துரியம் பரமெனத் தோன்றிடுந் தானே
(1) மிதமுரை

2206

அறிவறி கின்ற அறிவு நனவாம்
அறிவறி யாமை யடையக் கனவாம்
அறிவறி யவ்வறி யாமை சுழுத்தி
அறிவறி வாகு மான துரியமே

2207

தானெங்கு மாயவ னைம்மலந் தான்விட்டு
ஞானந் தனதுரு வாகி நயந்தபின்
தானெங்கு மாய்நெறி நின்றது தான்விட்டு
மேனந்தச் சூக்க மவைவன்ன மேலிட்டே

2208

ஐயைந்து மாறுமோ ரைந்து நனாவினில்
எய்யு நனவு கனவு சுழுத்தியா
மெய்யும்பின் சூக்கமும் மெய்ப்பகுதி மாயை
ஐயமுந் தானவ னத்துரி யத்தனே

2209

ஈதென் றறிந்திலன் இத்தனை காலமும்
ஈதென் றறிந்தபின் ஏதும் அறிந்திலேன்
ஈதென் றறியும் அறிவை அறிந்தபின்
ஈதென் றறியும் இயல்புடை (1)யோனே
(1) யோரே

2210

உயிர்க்குயி ராகி யுருவா யருவாய்
அயற்புணர் வாகி யறிவாய்ச் செறிவாய்
நயப்புறு சத்தியும் நாதன் உலகாதி
இயற்பின்றி யெல்லம் இருண்மூட மாமே

2211

சத்தி (1)யிராகத்திற் றானல் லுயிராகி
ஒத்துறு பாச மலமைந்தோ டாறாறு
தத்துவ பேதஞ் சமைத்துக் கருவியும்
வைத்தனன் ஈசன் (2)மலமறு மாறே
(1) யராகத்திற்
(1) விராகத்திற்
(2) மயமறு

2212
சாக்கிரா தீதத்தி லாணவந் தன்னுண்மை
சாக்கிரா தீதந் துரியத்திற் றானுறச்
சாக்கிரா தீதத்தில் ஆணவந் தான்விடாச்
சாக்கிரா தீதம் பரனுண்மை தங்குமே

2213
மலக்கலப் பாலே மறைந்தது சத்தி
மலக்கலப் பாலே மறைந்தது ஞானம்
மலக்கலப் பாலே மறைந்தனன் தாணு
மலக்கலப் பற்றான் மதியொளி யாமே

2214
திகைக்கின்ற சிந்தையுள் சிங்கங்கள் மூன்று
நகைக்கின்ற நெஞ்சுள் நரிக்குட்டி நான்கு
(1)வகைக்கின்ற நெஞ்சினுள் (2)ஆனைக்கன்றைந்து
பகைக்கின்ற (3)நெஞ்சுக்குப் பாலிரண்டாமே
(1) அசைக்கின்ற

(2) ஆனைகளைந்தும்
(3) நெஞ்சிற் பகையிவ ராமே

2215
கதறு பதினெட்டுக் (1)கண்களும் போகச்
சிதறி எழுந்திடுஞ் சிந்தையை நீரும்
விதறு படாமுன்னம் மெய்வழி நின்றால்
அதிர வருவதோர் ஆனையு மாமே
(1) கணங்களும்

2216
நனவகத் தேயொரு நாலைந்தும் வீடக்
கனவகத் தேயுட் கரணங்க ளோடு
முனவகத் தேநின் றுதறியுட் புக்கு
நினைவகத் தின்றிச் சுழுத்திநின் றானே

2217
நின்றவன் ஆசான் நிகழ்துரி யத்தனாய்
ஒன்றி யுலகின் நியமாதிக ளூற்றுச்
சென்று துரியாதீ தத்தே சிலகாலம்
நின்று பரனாய் நின்மல னாமே

2218
ஆனவவ் வீசன் அதீதத்தில் வித்தையாத்
தானுல குண்டு சதாசிவ மாசத்தி
மேனிகள் ஐந்தும்போய் விட்டுச் சிவமாகி

மோன மடைந்தொளி மூலத்த னாமே

2219

மண்டல முன்றினுள் மாயநன் னாடனைக்
கண்டுகொண் டுள்ளே கருதிக் கழிகின்ற
விண்டலர் தாமரை மேலொன்றுங் கீழாகத்
தண்டமுந் தான யகத்தினுள் ளாமே

2220

போதறி யாது புலம்பின புள் ளின
மாதறி யாவகை நின்று மயங்கின
வேதறி யாவணம் நின்றனன் எம்மிறை
சூதறி வாருச்சி சூடிநின் றாரே

2221

கருத்தறிந் தொன்பது கண்டமும் ஆங்கே
பொருத்தறிந் தோன்புவ னாபதி நாடித்
திருத்தறிந் தேன்மிகு தேவர் பிரானை
வருத்தறிந் தேன்மன மன்னிநின் றானே

2222

ஆன விளக்கொளி தூண்டு மவனென்னத்
தான விளக்கொளி யாமூல சாதனத்
தான விதிமூலத் தானத்தில் அவ்விளக்
கேனை மதிமண்ட லங்கொண் டெரியுமே

2223

உண்ணாடும் ஐவர்க்கு மண்டை யொதுங்கிய
விண்ணாட நின்ற வெளியை வினவுறில்
அண்ணாந்து பார்த்தைவர் கூடிய சந்தியிற்
கண்ணாடி காணுங் கருத்ததென் றானே

2224

அறியாத (1)வற்றை அறிவான் அறிவான்
அறிவான் அறியாதான் தன்னறி வாகான்
அறியா தவத்தை அறிவானைக் கூட்டி
அறியா தறிவானை யாரறி வாரே
(1) வத்தை

2225

துரிய தரிசனஞ் சொற்றோம் (1)வியோமம்
அரியன தூடண மன்னன வாதி
பெரியன கால பரம்பிற் றுரியம்
அரிய அதீதம் அதீதத்த தாமே
(1) யார்க்கும்
(1) வியாத்தம்

2226

மாயையிற் சேதனன் மன்னும் பகுதியோன்
மாயையின் மற்றது நீவுதன் மாயையாங்
கேவல மாகுஞ் (1)சகலமா யோனியுள்
தோயும் மனிதர் துரியத்துட் சீவனே

(1) சகலமாம்

7: கேவல சகல சுத்தம்

2227
தன்னை யறிசுத்தன் றற்கேவ லன்றானும்
பின்ன முறநின்ற பேத சகலனும்
மன்னிய சத்தசத் துச்சத சத்துடன்
துன்னுவர் தத்தந் தொழிற்கள வாகவே

2228
தானே தனக்குப் பகைவனும் நட்டானுந்
தானே தனக்கு மறுமையும் இம்மையுந்
தானே தான்செய்த வினைப்பயன் துய்ப்பானுந்
தானே தனக்குத் தலைவனு மாமே

2229
ஆமுயிர் கேவல மாமாயை இன்னடந்
தாமுயிர் மாயை (1)எறிப்ப அறிவுற்றுக்
காமிய மாயேய முங்கல வாநிற்பத்
தாமுறு பாசஞ் சகலத்த தாமே

(1) எழுப்ப அறிவுறக்

2230

சகல அவத்தையிற் சார்ந்தோர் சகலர்
புகலு மலமு வகையும் புணர்ந்தோர்
நிகரின் மலரோன்மா னீடுபல் தேவர்கள்
நிகழ்நரர் கீட மந்தமு மாமே

2231

தாவிய மாயையில் தங்கும் பிரளய
மேவிய மற்ற துடம்பாய்மிக் குள்ளன
ஓவல் இலக்கணர் ஒன்றிய சீகண்டர்
ஆவயி னூற்றெட் டுருத்திர ராமே

2232

ஆகின்ற கேவலத் தாணவத் தானவ
ராகின்ற வித்தேச ராமனந் தாதிய
ராகின்ற எண்மர் எழுகோடி மந்திர
ராகின்ற ஈசர் அநேகரு மாமே

2233

ஆமவ ரிற்சிவ னாரருள் பெற்றுளோர்
போமலந் தன்னாற் புகழ்விந்து நாதம்விட்
டோமய மாகி யொடுங்கலி னின்மலந்
தோமறு சுத்தா வவத்தைத் தொழிலே

2234

ஓரினு முவகை நால்வகை யும்முள
தேரி லிவைகே வலமாயை சேரிச்சை
சாரிய லாயவை (1)தாமே தணப்பவை
வாரிவைத் தீசன் மலமறுத் தானே
(1) தானே

2235

(1)பொய்யான போதாந்த மாறாறும் விட்டகன்
றெய்யாமை நீங்கவே (2)எய்தவன் தானாகி
மெய்யாஞ் சராசர மாய்வெளி தன்னுட்புக்
கெய்தாம லெய்துஞ்சுத் தாவத்தை யென்பதே
(1) மெய்யான
(2) வெய்யவன்
(2) ஏதவன்

2236

அனாதி பசுவியாத்தி யாகு மிவனை
அனாதியில் வந்த மலம் ஐந்தால் ஆட்டி
அனாதியிற் கேவல மச்சக லத்திட்டு
அனாதின் பிறப்பறச் சுத்தத்துக ளாகுமே

2237

அந்தரஞ் சுத்தாவத் தைகே வலத்தாறு
தந்தோர்தஞ் சுத்தகே வலத்தற்ற தற்பரத்
தின்பால் துரியத் திடையே யறிவுறத்

தன்பால் தனையறி தத்துவந் தானே

2238

ஐயைந் தொடுங்கும் ஆன்மாவில் ஆன்மாவும்
மெய்கண்டு சுத்த அவத்தையில் வீடாகுந்
துய்யவவ் வித்தை முதன்மூன்றுந் தொல்சத்தி
ஐய (1)சிவஞ்சித்தி யாந்தோற்ற மவ்வாறே
(1) சிவஞ்சத்தி

2239

ஐயைந்து (1)மான்மாவில் ஆறோ டடங்கிடு
மெய்கண்ட மேன்மூன்று மேவுமெய் யோகத்தில்
கைகண்ட சத்தி சிவபாகத் தேகாண
(2)எய்யும் படியடங் குந்நாலேழ் எய்தியே
(1) மானவில்
(2) எய்தும்

2240

ஆணவத் தாரொன் றறியாத கேவலர்
பேணிய மாயைப் பிரளயா கலராகுங்
(1)காணும் உருவினர் காணாமை காண்பவே
பூணுஞ் சகலர்முப் பாசமும் புக்கோரே
(1) காணம்

2241

ஆணவ மாகும் விஞ்ஞான கலருக்குப்

பேணிய மாயை பிரளயா கலருக்கே
ஆணவ மாயையுங் கன்ம மூன்றுமே
காணுஞ் சகலர்க்குக் காட்டு மலங்களே

2242
கேவலந் தன்னிற் கிளர்ந்தவிஞ் ஞாகலர்
கேவலந் தன்னிற் கிளர்விந்து சத்தியால்
ஆவயிற் கேவலத் தச்சக லத்தையும்
மேவிய மந்திர மாமாயை மெய்ம்மையே

2243
மாயையின் மன்னும் பிரளயா கலர்வந்து
மாயையுந் தோன்றா வகைநிற்க ஆணவ
மாய சகலத்துக் காமிய மாமாயை
ஏயமன் னூற்றெட் டுருத்திரர் என்பவே

2244
(1)மும்மலங் கூடி முயங்கி மயங்குவோர்
அம்மெய்ச் சகலத்தார் தேவர் சுரர்நரர்
மெய்ம்மையில் வேதா விரிமிகு கீடாந்தத்
தம்முறை யோனிபுக் கார்க்குஞ் சகலரே
(1) மும்மல மைம்மலங் கூடி முயங்குவோர்

2245
சுத்த அவத்தையில் தோய்ந்தவர் மும்மலச்
சத்தசத் தோடத் (1)தனித்தனி பாசமும்

மத்த இருள்சிவ னான கதிராலே
தொத்தற விட்டிடச் சுத்தரா வார்களே
(1) தனித்தளை

2246
தற்கே வலம்முத்தி தானே தனிமையாம்
பிற்பாற் சகலங் கலாதிப் பிறிவதாஞ்
சொற்பாற் புரிசுத்த கேவலஞ் சாக்கிரந்
தற்பாற் புரிவது தற்சுத்த மாமே

2247
அறிவின்றி (1)முத்தன் அராகாதி சேரான்
குறியொன்றி (2)லாநித்தன் கூடான் கலாதி
செறியுஞ் செயலிலான் றினங்கற்ற வல்லோன்
கிறியன் மலவியாபி கேவலந் தானே
(1) முத்தோன்
(2) லாதித்தன்

2248
விந்துவும் மாயையும் மேவுங் கிரியையுஞ்
சந்தத ஞான பரையுந் தனுச்சத்தி
விந்துவின் மெய்ஞ்ஞான மேவும் பிரளயர்
வந்த சகலசுத் தான்மாக்கள் வையத்தே

2249
கேவல மாதியிற் பேதங் கிளக்குறிற்

கேவல மூன்றுங் கிளருஞ் சகலத்துள்
ஆவயின் மூன்று மதிசுத்த மூடவே
ஓவலில் லாவொன்பா னுற்றுணர் வோர்கட்கே

2250
கேவலத்திற் கேவலம் அதீதா தீதங்
கேவலத் திற்சக லங்கள் வயிந்தவங்
கேவலத் திற்சுத்தங் கேடில்விஞ் (1)ஞாகலர்க்
காவயி னாதன் அருண்மூர்த்தி தானே
(1) ஞானகலர்க்

2251
சகலத்திற் கேவலஞ் சாக்கிரா தீதஞ்
சகல சகலமே சாக்கிர சாக்கிரஞ்
சகலத்திற் சுத்தமே தற்பரா வத்தை
சகலத்தில் இம்மூன்று தன்மையு மாமே

2252
சுத்தத்திற் சுத்தமே தொல்சிவ மாகுதல்
சுத்தத்திற் கேவலந் தொல்லுப சாந்தமாஞ்
சுத்த சகலந் துரிய விலாசமாஞ்
சுத்தத்தில் இம்மூன்றுஞ் சொல்லு மாமே

2253
சாக்கிர சாக்கிரந் தன்னிற் கனவொடுஞ்
சாக்கிரந் தன்னிற் சுழுத்தி துரியமே

சாக்கிரா தீதந் தனிற்சுகா னந்தமே
ஆக்கு மறையாதி ஐம்மல பாசமே

2254
சாக்கிரா தீதத்திற் றானறு மாணவஞ்
சாக்கிரா தீதம் பராவத்தை தங்காது
ஆக்கு பரோபதி (1)யாஉப சாந்தத்தை
நோக்கு மலங்குண நோக்குத லாகுமே
(1) யாமுப

2255
பெத்தமும் முத்தியும் (1)பேணுந் துரியமுஞ்
சுத்த வதீதமுந் தோன்றாமற் றானுணும்
அத்தன் அருளென் றருளால் அறிந்தபின்
சித்தமும் இல்லை செயலில்லை தானே
(1) பேணுஞ் சகலமுஞ்

2256
எய்திய பெத்தமும் முத்தமும் என்பன
எய்தும் அரனறு ளேவிளை யாட்டோ
டெய்தி டுயிர்சுத்தத் திடுநெறி என்னவே
எய்தும் உயிரிறை பாலறி வாமே

2257
ஐம்மலத் தாரு மதித்த சகலத்தர்
ஐம்மலத் தாரு மருவினைப் பாசத்தார்

ஐம்மலத் தார்சுவர்க் கந்நெறி யாள்பவர்
ஐம்மலத் தாரர னார்க்கறி வோரே

2258
கருவி லதீதங் கலப்பிக்கு மாயை
அரிய துரிய மதிலுண்ணும் ஆசையும்
உரிய சுழுனை முதலெட்டுஞ் சூக்கத்
தரிய கனாத்தூலம் அந்நன வாமே

2259
ஆணவ மாகும் (1)அதீதமேன் மாயையும்
பூணுந் துரியஞ் சுழுத்திபொய்க் காமியம்
பேணுங் கனவும் மாமாயை திரோதாயி
காணு நனவில் மலக்கலப் பாகுமே
(1) அதீதத்து

2260
அரன்முத லாக அறிவோன் அதீதத்தன்
அரன்முத லாமாயை தங்கிச் சுழுனை
கருமம் உணர்ந்து மாமாயைக் கைக்கொண்டோர்
அருளூ மறைவார் சகலத்துற் றாரே

2261
உருவுற்றுப் போகமே போக்கியந் துற்று
மருவுற்றுப் பூதம னாதியான் மன்னி
வருமச் செயல்பற் றிச் சத்தாதி வைகிக்

கருவுற் றிடுஞ்சீவன் காணுஞ் சகலத்தே

2262

இருவினை யொத்திட இன்னருட் சத்தி
மருவிட ஞானத்தில் ஆதன மன்னிக்
குருவினைக் கொண்டருட் சத்திமுன் கூட்டிப்
பெருமல நீங்கிப் பிறவாமை சுத்தமே

2263

ஆறாறு மாறதின் ஐயைந் தவத்தையோ
டீறா மதீதத் துரியத் திவனெய்தப்
பேறான ஐவரும் போம்பிர காசத்து
நீறார் பரஞ்சிவ மாதேய மாகுமே

2264

தன்னை யறியா துடலைமுன் தானென்றான்
தன்னைமுன் கண்டான் துரியந் தனைக்கண்டான்
உன்னுந் துரியமும் ஈசனோ டொன்றாக்கால்
பின்னையும் வந்து பிறந்திடுந் தானே

2265

சாக்கிரந் தன்னில் அதீதந் தலைப்படில்
ஆக்கிய வந்த வயிந்தவ மானந்த
நோக்கும் பிறப்பறு நோன்முத்தி சித்தியாம்
வாக்கும் மனமும் மருவல் செய்யாவே

2266

அப்பும் அனலும் அகலத்து ளேவரும்
அப்பும் அனலும் அகலத்து ளேவாரா
அப்பும் அனலும் அகலத்து ளேதனில்
அப்பும் அனலும் கலந்ததவ் வாறே

2267

(1)அறுநான்க சுத்தம் அதிசுத்தா சுத்தம்
உறுமேழு மாயை (2)உடனைந்தே சுத்தம்
பெறுமா றிவைமுன்றுங் கண்டத்தாற் பேதித்
துறுமாயை மாமாயை யான்மாவி னோடே
(1) அறுநான்கு சுத்தம்
(2) உடனணைந்தே

2268

மாயைகைத் தாயாக மாமாயை யீன்றிட
வாய பரசிவன் தந்தையாய் நிற்கவே
ஏயும் உயிர்க்கே வலசகலத் தெய்தி
ஆய்தரு சுத்தமுந் தான்வந் தடையுமே

8: பராவத்தை

2269

அஞ்சுங் (1)கடந்த அனாதி பரந்தெய்வ
நெஞ்சம தாய நிமலன் பிறப்பிலி
விஞ்சும் உடலுயிர் வேறு படுத்திட
வஞ்சத் திருந்த வகையறிந் தேனே
(1) கடந்தவன் ஆதி

2270

சத்தி பராபரஞ் சாந்தி தனிலான
சத்தி பரானந்தந் தன்னிற் சுடர்விந்து
சத்திய மாயை தனுச்சத்தி ஐந்துடன்
சத்தி பெறுமுயிர் தானங்கத் தாறுமே

2271

ஆறாறுக் கப்பால் அறிவார் அறிபவர்
ஆறாறுக் கப்பால் அருளார் பெறுபவர்
ஆறாறுக் கப்பால் (1)அறிவாம் அவர்கட்கே
ஆறாறுக் கப்பால் அரனினி தாமே
(1) அறிவார்

2272

அஞ்சொடு நான்குங் கடந்தக மேபுக்குப்
பஞ்சணி காலத்துப் பள் ளி துயில்கின்ற
விஞ்சையர் வேந்தனும் மெல்லிய லாளொடு
நஞ்சுற நாடி நயஞ்செய்யு மாறே

2273

உரிய நனாத்துரி யத்தி லிவனாம்
அரிய துரிய நனாவாதி மூன்றிற்
பரிய பரதுரி யத்திற் பரனாந்
திரிய வருந்துரிய யத்திற் சிவமே

2274

பரமாம் அதீதமே பற்றறப் பற்றப்
பரமாம் அதீதம் பயிலப் பயிலப்
பரமாம் அதீதம் (1)பயிலாத் தபோதனர்
பரமாகார் பாசமும் பற்றொன் றறாதே
(1) பயிலாத போதம்

2275

ஆயும்பொய்ம் மாயை யகம்புற மாய்நிற்கும்
வாயு மனமுங் கடந்த (1)மயக்கறின்
தூய அறிவு சிவானந்த மாகிப்போய்
வேயும் பொருளாய் விளைந்தது தானே
(1) மயக்கந்

2276

துரியப் பரியில் இருந்த அச் சீவனைப்
பெரிய வியாக்கிரத் துள்ளே புகவிட்டு
நரிகளை யோடத் துரத்திய நாதர்க்
குரிய வினைகள்நின் றோலமிட் டன்றே

2277

நின்ற இச் சாக்கிர நீள்துரி யத்தினின்
(1)மன்றனு மங்கே மணஞ்செய்ய நின்றிடும்
மன்றன் மணஞ்செய்ய மாயை மறைந்திடும்
அன்றே யிவனும் அவன்வடி வாமே
(1) மன்றலு

2278

விரிந்திடிற் சாக்கிர மேவும் விளக்காய்
இருந்த விடத்திடை யீடான மாயை
பொருந்துந் துரியம் புரியிற்றா னாகுந்
தெரிந்த துரியத்துத் தீதக லாதே

2279

உன்னை யறியா துடலைமுன் நானென்றாய்
உன்னை யறிந்து துரியத் துறநின்றாய்
தன்னை யறிந்தும் பிறவி தணவாதால்
அன்ன வியாத்தன் அமலனென் றறிதியே

2280

கருவரம் பாகிய காயந் துரியம்
இருவருங் கண்டீர் பிறப்பிறப் புற்றார்
குருவரம் பெற்றவர் கூடிய பின்னை
இருவரு மின்றியொன் றாகிநின் றாரே

2281

அணுவின் துரியத்தி லான நனவும்
அணுவசை வின்கண் ணான கனவும்
அணுவசை விற்பரா தீதஞ் சுழுத்தி
(1)பணியிற் பரதுரி யம்பர மாமே
(1) பணிவில்

2282

பரதுரி யத்து நனவும் பரந்து
விரிசக முண்ட கனவுமெய்ச் சாந்தி
உருவுறு கின்ற (1)சுழுத்தியும் ஓவத்
தெரியுஞ் சிவதுரி யத்தனு மாமே
(1) சுழுனையும்

2283

பரமா நனவின்பின் பாற்சக முண்ட
திரமார் கனவுஞ் சிறந்த சுழுத்தி
உரமாம் உபசாந்த முற்றல் துறவே
தரனாஞ் சிவதுரி யத்தனு மாமே

2284

சீவன் துரிய முதலாகச் சீரான
ஆவ சிவன்துரி யாந்தம் அவத்தைபத்
தோவும் பராநந்தி யுண்மைக்குள் வைகியே
மேவிய நாலேழ் விடுத்துநின் றானே

2285

பரஞ்சிவன் மேலாம் பரமம் பரத்திற்
பரம்பரன் மேலாம் பரநன வாக
விரிந்த கனாவிடர் வீட்டுஞ் சுழுனை
உரந்தகு மாநந்தி யாமுண்மை தானே

2286

சார்வாம் பரசிவஞ் (1)சத்தி பரநாதம்
மேலாய விந்து சதாசிவ மிக்கோங்கிப்
பாலாய்ப் பிரமன் அரியம ராபதி
தேவாம் உருத்திரன் ஈசனாங் காணிலே
(1) சத்திபால் நாதமாம்

2287

கலப்பறி யார்கடல் சூழுல கேழும்
உலப்பறி யாருட லோடுயிர் தன்னை
அலப்பறிந் திங்கர சாளகி லாதார்
குறிப்பது கோல மடலது வாமே

2288

பின்னை யறியும் பெருந்தவத் துண்மைசெய்
தன்னை யறியில் தயாபரன் எம்மிறை
முன்னை யறிவு முடிகின்ற காலமும்
என்னை யறியலுற் றின்புற்ற வாறே

2289

பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணம்
தன்னை மறைத்தது தன்கர ணங்களாம்
தன்னின் மறைந்தது தன்கர ணங்களே

2290

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
(1)பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே
(1) பரத்துள்

2291

ஆறா றகன்று நமவிட் டறிவாகி
வேறான தானே யகாரமாய் மிக்கோங்கி
ஈறார் பரையின் இருளற்ற தற்பரன்
பேறார் சிவாய அடங்கும்பின் முத்தியே

2292

துரியத்தில் ஓரைந்துஞ் சொல்லக ராதி
விரியப் பரையின் மிகுநாத மந்தம்
புரியப் பரையின் பராவத்தா போதந்
திரியப் பரமந் துரியந் தெரியவே

2293

ஐந்துஞ் சகலத் தருளாற் (1)புரிவற்றுப்

பந்திடுஞ் சுத்த அவத்தைப் பதைப்பினில்
நந்தி பராவத்தை நாடச் சுடர்முனம்
அந்தி யிருள்போலும் ஐம்மல மாறுமே
(1) புரிவுற்றுப்

2294
ஐயைந்து மட்டுப் பகுதியும் மாயையும்
பொய்கண்ட மாமாயை தானும் புருடன்கண்
டெய்யும் படியாய் எவற்றுமாய் அன்றாகி
உய்யும் பராவத்தை யுள்ளுறல் சுத்தமே

2295
நின்றான் அருளும் பரமுமுன் னேயமும்
ஒன்றாய் மருவும் உருவும் உபாதியுஞ்
சென்றா னெனைவிடுத் தாங்கிற்செல் லாமையும்
நன்றான ஞானத்தின் நாதப் பிரானே

## 9: முக்குண நிர்க்குணம்

2296
(1)சாத்திக மெய்து நனவெனச் சாற்றுங்கால்

வாய்த்த இராசத மன்னுங் கனவென்ப
ஓய்த்திடுந் தாமதம் உற்ற சுழுத்தியாம்
(2)மாய்த்திடு நிர்க்குண மாசில் துரியமே
(1) சாத்திய பேதம்
(1) சாத்திய வேதம்
(2) ஆய்த்திடு

10: அண்டாதி பேதம்

2297
பெறுபகி ரண்டம் பேதித்த அண்டம்
எறிகடல் ஏழின் மணல் அள வாகப்
பொறியொளி (1)பொன்னணி யென்ன விளங்கிச்
செறியும் அண் டாசனத் தேவர் பிரானே
(1) பொன்மணி
(1) பொன்னொளி

2298
ஆனந்த தத்துவம் அண்டா சனத்தின்மேல்
மேனிஐந் தாக வியாத்தமுப் பத்தாறாய்த்
தானந்த மில்லாத தத்துவ மானவை

ஈனமி லாஅண்டத் தெண்மடங் காமே

## 11: பதினோராானந்தானமும் அவத்தையனக் காணல்

2299

அஞ்சில் அமுதுமோ ரேழின்கண் ஆனந்த
முஞ்சிலோங் காரமோ ரொன்பான் பதினொன்றில்
வஞ்சக மேநின்று வைத்திடிற் காயமாங்
கிஞ்சுகச் செவ்வாய்க் கிளிமொழி கேளே

2300

புருட னுடனே பொருந்திய (1)சித்தம்
அருவமொ டாறும் அதீதத் துரியம்
விரியுஞ் சுழுத்தியின் மிக்குள்ள எட்டும்
அரிய பதினொன்று மாமவ் வவத்தையே
(1) தேசும்

2301

காட்டும் பதினொன்றுங் கைகலந் தாலுடல்
நாட்டி யழுத்திடின் நந்தியல் லாலில்லை
ஆட்டஞ்செய் யாத வதுவிதி யேநினை

ஈட்டு மதுதிடம் எண்ணலு மாமே

12: கலவு செலவு

2302
கேவலந் தன்னிற் கலவச் சகலத்தின்
மேவுஞ் செலவு விடவரு நீக்கத்துப்
பாவுந் தனைக்காண்டன் மூன்றும் படர்வற்ற
தீதறு சாக்கிரா தீதத்திற் சுத்தமே

2303
வெல்லும் அளவில் விடுமின் வெகுளியை
செல்லும் அளவுஞ் செலுத்துமின் சிந்தையை
அல்லும் பகலும் (1)அருளுடன் தூங்கினாற்
கல்லும் பிளந்து கடுவெளி யாமே
(1) அறிவுடன்

13: நின்மலாவத்தை

2304

ஊமைக் கிணற்றகத் துள்ளே யுறைவதோர்
ஆமையின் உள்ளே (1)யழுவைகள் ஐந்துள
வாய்மையி னுள்ளே வழுவா தொடுங்குமேல்
ஆமையின் மேலுமோ ராயிரத் தாண்டே
(1) யுழுவைகள்

2305

காலங்கி நீர்பூக் கலந்த ஆ காயம்
மாலங்கி யீசன் பிரமன் சதாசிவன்
மேலஞ்சும் ஓடி விரவவல் லார்கட்குக்
காலனும் இல்லை கருத்தில்லை தானே

2306

ஆன்மாவே மைந்த னாயினன் என்பது
தான்மா மறையறை தன்மை யறிகிலர்
ஆன்மாவே மைந்தன் அர னுக் கிவனென்றல்
ஆன்மாவும் இல்லையால் ஐயைந்தும் இல்லையே

2307

உதய மழுங்கல் ஒடுங்கலிம் முன்றின்
கதிசாக் கிரங்கன வாதி சுழுத்தி
பதிதரு சேதனன் பற்றாந் துரியத்
ததிசுப னாயனந் தானந்தி யாகுமே

2308

எல்லாந்தன் னுட்புக யாவுளந் தானாகி
நல்லாந் துரியம் புரிந்தக்கால் நல்லுயிர்
பொல்லாத வாறாறுட் போகாது போதமாய்ச்
செல்லாச் சிவகதி சென்றெய்து மன்றே

2309

காய்ந்த இரும்பு கனலை யகன்றாலும்
வாய்ந்த கனலென வாதனை நின்றாற்போல்
ஏய்ந்த கரணம் இறந்த துரியத்துத்
தோய்ந்த கருமத் துரிசக லாதே

2310

ஆன மறையாதி யாமுரு நந்திவந்
தேனை யருள்செய் (1)தெரிநனா வத்தையில்
ஆன வகையை விடுமடைத் தாய்விட
ஆன மலாதீதம் அப்பரந் தானே
(1) தெரிசனா வவத்தையில்

2311

சுத்த அதீதஞ் சகலத்தில் தோய்வுறில்
அத்தன் அருள்நீங்கா வாங்கணிற் றானாகச்
சித்த சுகத்தைத் தீண்டாச் சமாதிசெய்
தத்தனோ டொன்றற் கருள்முத லாமே

2312

வேறுசெய் தானிரு பாதியின் மெய்த்தொகை
வேறுசெய் தானென்னை எங்கணும்விட்டுய்த்தான்
வேறுசெய் யாவருட் கேவலத் தேவிட்டு
வேறுசெய் யாவத்தன் மேவிநின் றானே

2313

கறங்கோலை கொள் ளிவட் டங்கட லில்திரை
நிறஞ்சேர் ததிமத்தின் (1)மலத்தே நின்றங்
கறங்காண் சுவர்க்க நரகம் புவிசேர்ந்
(2)திறங்கா வுயிரரு ளாலிவை நீங்குமே
(1) மலத்தினில்
(2) திரங்கா

2314

தானே சிவமான தன்மை தலைப்பட
ஆன மலமுமப் பாச பேதமும்
மான குணமும் பரான்மா வுபாதியும்
பானுவின் முன்மதி போற்பட ராவே

2315

நெருப்புண்டு நீருண்டு வாயுவும் உண்டங்
கருக்கனுஞ் சோமனும் அங்கே அமருந்
திருத்தக்க மாலுந் திசைமுகன் தானும்
உருத்திர சோதியும் உள்ளத்து ளாரே

2316

ஆனைகள் ஐந்தும் அடக்கி அறிவென்னும்
ஞானத் திரியைக் கொளுவி அதனுட்புக்
கூனை யிருளர நோக்கும் ஒருவற்கு
வானக மேற வழியெளி தாமே

2317

ஆடிய காலில் (1)அசைக்கின்ற வாயுவுந்
தாடித் தெழுந்த தமருக ஓசையும்
பாடி யெழுகின்ற வேதா கமங்களும்
நாடியி னுள்ளாக நான்கண்ட வாறே
(1) அசைகின்ற

2318

(1)முன்னை யறிவினிற் செய்த முதுதவம்
(2)பின்னை யறிவினைப் பெற்றால் அறியலாந்
தன்னை யறிவ தறிவாமஃ தன்றிப்
பின்னை யறிவது பேயறி (3)வாகுமே
(1) முன்னைப் பிறவியிற்
(2) பின்னைப் பிறவியிற்
(3) வாமே

2319

செயலற் றிருக்கச் சிவானந்த மாகுஞ்
செயலற் றிருப்பார் (1)சிவயோகந் தேடார்
செயலற் றிருப்பார் செகத்தொடுங் கூடார்

செயலற் றிருப்பர்க்கே செய்தியுண் டாமே
(1) சிவோகமுந் தேறார்

2320
தானவ னாகுஞ் சமாதிகை கூடினால்
ஆன மலமறும் அப்பசுத் தன்மைபோம்
ஈனமில் காயம் இருக்கும் இருநிலத்
தூனங்கள் எட்டு மொழித்தொன்று வோர்கட்கே

2321
தொலையா அரனடி (1)தோன்றுமஞ் சத்தி
தொலையா இருளொளி தோற்ற அணுவுந்
தொலையாத் தொழின்ஞானந் தொன்மையில் நண்ணித்
தொலையாத பெத்தமுத் திக்கிடை தோயுமே
(1) தோன்றுமைஞ்

2322
தோன்றிய பெத்தமும் முத்தியுஞ் சூழ்சத்தி
மான்றுந் தெருண்டு முயிர்பெறு மற்றவை
தான்தரு ஞானந்தன் சத்திக்குச் சாதனா
மூன்றலில் லாவுள் ளொளிக்கொளி யாமே

2323
அறிகின்றி (1)லாதன ஐயேழும் ஒன்றும்
அறிகின்ற என்னை யறியா திருந்தேன்
அறிகின்றாய் நீயென் றருள்செய்தான் நந்தி

அறிகின்ற நானென் றறிந்துகொண் டேனே
(1) லாதான

2324

தானவ னாகிய ஞானத் தலைவனை
வானவ ராதியை மாமணிச் சோதியை
ஈனமின் ஞானத் தின்னருட் சத்தியை
ஊனமி லாள்தன்னை யூனிடைக் கண்டதே

2325

ஒளியும் இருளும் பரையும் பரையுள்
அளிய தெனலாகும் ஆன்மாவை யன்றி
அளியும் அருளுந் தெருளுங் கடந்து
தெளிய அருளே சிவானந்த மாமே

2326

ஆனந்த மாகும் அரனருட் சத்தியிற்
றானந்த மாமுயிர் தானே சமாதிசெய்
தூனந்த மாயுணர் வாயுள் ளுணர்வுறிற்
கோனந்தம் வாய்க்கு மகாவாக் கியமாமே

2327

அறிவிக்க வேண்டாம் அறிவற் றயர்வோர்க்கும்
அறிவிக்க வேண்டாம் அறிவிற் செறிவோர்க்கும்
அறிவுற் றறியாமை யெய்திநிற் போர்க்கே
அறிவிக்கத் தம்மறி வாரறி வோரே

2328

சத்தும் அசத்துஞ் சதசத்துந் தான் கூடிச்
சித்தும் அசித்துஞ் (1)சிவசித்த தாய்நிற்குஞ்
சுத்தம் அசுத்தந் தொடங்காத் துரியத்துச்
சுத்தரா மூன்றுடன் சொல்லற் றவர்களே
(1) சிவசித்து மாய்நிற்குஞ்
(1) சிவசத்த மாய் நிற்குஞ்

2329

தானே யறியான் அறிவிலோன் தானல்லன்
தானே யறிவான் அறிவு சதசத்தென்
றானால் இரண்டும் அரனரு ளாய்நிற்கத்
தானே யறிந்து சிவத்துடன் தங்குமே

2330

தத்துவ ஞானந் தலைப்பட் டவர்கட்கே
தத்துவ ஞானந் தலைப்பட லாய்நிற்குந்
தத்துவ ஞானத்துத் தானவ னாகவே
தத்துவ ஞானானந் தந்தான் தொடங்குமே

2331

தன்னை யறிந்து சிவனுடன் தானாக
மன்னு மலங்குணம் மாளும் பிறப்பறும்
பின்னது சன்முத்தி சன்மார்க்கப் பேரொளி
நன்னது ஞானத்து முத்திரை நண்ணுமே

2332

ஞானந்தன் மேனி கிரியை நடுவங்கந்
தானுறும் இச்சை உயிராகத் தற்பரன்
மேனிகொண் டைங்கரு மத்துவித் தாதலான்
மோனிகள் (1)ஞானத்து முத்திரைபெற் றார்களே
(1) ஞானத்தின் முத்தி

2333

உயிர்க்கறி வுண்மை யுயிரிச்சை மானம்
உயிர்க்குக் கிரியை யுயிர்மாயை சூக்கம்
உயிர்க்கிவை யூட்டுவோன் ஊட்டு மவனே
உயிர்ச்செய லன்றியவ் வுள்ளத்து ளானே

2334

தொழிலிச்சை ஞானங்கள் தொல்சிவ சீவர்
கழிவற்ற மாமாயை மாயையி னாகும்
பழியற்ற காரண காரியம் பாழ்விட்
டழிவற்ற சாந்தாதீ தன்சிவ னாமே

2335

இல்லதும் உள்ளது மியாவையுந் தானாகி
இல்லதும் உள்ளது மாயன்றாம் அண்ணலைச்
சொல்லது சொல்லிடில் தூராதி தூரமென்
றொல்லை யுணர்ந்தால் உயிர்க்குயி ராகுமே

2336

உயிரிச்சை யூட்டி யுழிதருஞ் சத்தி
உயிரிச்சை வாட்டி யொழித்திடு ஞானம்
உயிரிச்சை யூட்டி யுடனுற லாலே
உயிரிச்சை வாட்டி யுயர்பதஞ் சேருமே

2337

சேருஞ் சிவமானார் ஐம்மலந் (1)தீர்ந்தவர்
ஓரொன்றி லாரைம் மலவிருள் உற்றவர்
பாரின்கண் விந்த ரகம்புகும் பான்மையர்
ஆருங்கண் டோரார் அவையருள் என்றே
(1) தீந்தவர்

2338

எய்தினர் செய்யு மிருமாயா சத்தியின்
எய்தினர் செய்யும் இருஞான சத்தியின்
எய்தினர் செய்யும் இருஞால சத்தியின்
எய்தினர் செய்யும் இறையருள் தானே

2339

திருந்தனர் விட்டார் திருவி னரகந்
திருந்தனர் விட்டார் திருவார் சுவர்க்கந்
திருந்தனர் விட்டார் செறிமலக் கூட்டந்
திருந்தனர் விட்டார் சிவமா யவமே

2340

அவமுஞ் சிவமும் அறியார் அறியார்
அவமுஞ் சிவமும் அறிவார் அறிவார்
அவமுஞ் சிவமும் (1)அருளால் அறிந்தால்
அவமுஞ் சிவமும் அவனரு ளாமே
(1) அறிவால்

2341

அருளான சத்தி யனல்வெம்மை போலப்
பொருளவ னாகத்தான் போதம் புணரும்
இருளொளி யாய்மீண்டு மும்மல மாகுந்
திருவரு ளானந்தி செம்பொரு ளாமே

2342

ஆதித்தன் தோன்ற வரும்பது மாதிகள்
பேதித்த தவ்வினை யாற்செயல் சேதிப்ப
ஆதித்தன் றன்கதி ராலவை சேட்டிப்பப்
(1)பேதித்துத் பேதியா வாறருட் பேதமே
(1) பேதித்த வேதியர் பேரருட் பேதமே

2343

பேதம் அபேதம் பிறழ்பேதா பேதமும்
போதம் புணர்போதம் போதமும் நாதமும்
நாத முடனாக நாதாதி நாதமும்
ஆதன் அருளின் அருளிச்சை யாமே

2344

மேவிய பொய்க்கரி யாட்டும் வினையெனப்
பாவிய பூதங்கொண் டாட்டிப் படைப்பாதி
பூவியல் கூட்டத்தாற் போதம் புரிந்தருள்
ஆவியை நாட்டும் அரனரு ளாமே

2345

ஆறா றகன்று தனையறிந் தானவன்
ஈறாகி யாவினு மியாவுந் தனிலெய்த
வேறாய் வெளிபுக்கு வீடுற்றா னம்மருள்
தேறாத் தெளிவுற்றுத் தீண்டச் சிவமாமே

2346

தீண்டற் கரிய திருவடி நேயத்தை
மீண்டுற் றருளால் விதிவழி யேசென்று
தூண்டிச் சிவஞான மாவினைத் தானேறித்
தாண்டிச் சிவனுடன் சாரலு மாமே

2347

சார்ந்தவர் சாரணர் சித்தர் சமாதியர்
சார்ந்தவர் மெய்ஞ்ஞான தத்துவ சாத்தியர்
சார்ந்தவர் நேயந் தலைப்பட்ட ஆனந்தர்
சார்ந்தவர் (1)சத்த அருட்டன்மையாரே
(1) அச்சுதர்

2348

தானென் றவனென் றிரண்டென்பர் தத்துவந்

தானென் றவனென் றிரண்டற்ற தன்மையைத்
தானென் றிரண்டுன்னார் கேவலத் தானவர்
தானின்றித் தானாகத் தத்துவ சுத்தமே

2349
(1)தன்னினில் தன்னை யறியுந் தலைமகன்
(1)தன்னினில் தன்னை (2)யறியத் தலைப்படுந்
(1)தன்னினில் தன்னைச் (3)சார்கில னாகில்
(1)தன்னினில் தன்னையுஞ் சார்தற் கரியவே
(1) தன்னில்
(2) அறியில்
(3) அறிவிலன் ஆயிடில்

2350
அறியகி லேனென் றரற்றாதே நீயும்
நெறிவழி யேசென்று நேர்பட்ட பின்னை
இருசுட ராகி இயற்றவல் லானும்
ஒருசுட ராவந்தென் உள்ளத்துள் ளாமே

2351
மண்ணொன்று தான்பல நற்கல னாயிடும்
உண்ணின்ற யோனிகட் கெல்லாம் ஒருவனே
கண்ணொன்று தான்பல காணுந் தனைக்காணா
அண்ணலும் (1)அவ்வண்ண மாகிநின் றானே
(1) இவ்வண்ண

2352

ஓம்புகின் றானுல கேழையும் உள்நின்று
கூம்புகின் றார்குணத் தின்னொடுங் கூறுவர்
தேம்புகின் றார்சிவஞ் சிந்தைசெய் யாதவர்
கூம்புகில் லார்வந்து கொள்ளலு மாமே

2353

குறியறி யார்கள் குறிகாண மாட்டார்
குறியறி யார்கடங் கூடல் பெரிது
குறியறி யாவகை கூடுமின் கூடி
அறிவறி யாவிருந் தன்னமு மாமே

2354

ஊனோ வுயிரோ வுறுகின்ற தேதின்பம்
வானோர் தலைவி மயக்கத் துறநிற்கத்
தானோ பெரிதறி வோமென்னு மானுடர்
தானே பிறப்போ டிறப்பறி யாரே

## 14: அறிவுதயம்

2355

தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமல் (1)தானே கெடுகின்றான்
தன்னை யறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே யர்ச்சிக்கத் தானிருந் தானே
(1) தான் கெடுகின்றனன்

2356
அங்கே யடற்பெருந் தேவரெல் லாந்தொழச்
சிங்கா சனத்தே சிவனிருந் தானென்று
சங்கார் வளையுஞ் சிலம்புஞ் சரேலெனப்
பொங்கார் குழலியும் போற் றிஎன் றாளே

2357
அறிவு வடிவென் றறியாத என்னை
அறிவு வடிவென் (1)றருள்செய்தான் நந்தி
அறிவு வடிவென் றருளால் (2)அறிந்தே
அறிவு வடிவென் (3)றறிந்திருந் தேனே
(1) றறிவித்தான் என் நந்தி
(2) அறிந்தும்
(3) றறிந்து மிலேனே

2358
அறிவுக் கழிவில்லை யாக்கமும் இல்லை
அறிவுக் (1)கறிவல்ல தாதாரம் இல்லை
அறிவே யறிவை யறிகின்ற தென்றிட்
டறைகின் றனமறை யீறுகள் தாமே

(1) அறிவல்லால் ஆதாரம்

2359

ஆயு மலரின் அணிமலர் (1)தன்மேலே
பாய இதழ்கள் பதினாறும் அங்குள
தூய அறிவு சிவானந்த (2)மாகியே
போய அறிவாய்ப் (3)புணர்ந்திருந் தானே

(1) மேலது வாய இதழும்
(2) மாகிப் போய் மேய
(3) விளைந்தது

2360

மன்னிநின் றாரிடை வந்தருண் மாயத்து
முன்னிநின் றானை மொழிந்தேன் முதல்வனும்
பொன்னிவந் தானோர் புகழ்திரு மேனியைப்
பின்னிநின் றேனீ பெரியையென் றானே

2361

அறிவறி வாக அறிந்தன்பு செய்மின்
அறிவறி வாக அறியுமிவ் வண்ணம்
அறிவறி வாக அணிமாதி சித்தி
அறிவறி வாக அறிந்தனன் நந்தியே

2362

அறிவறி வென்றங் கரற்றும் உலகம்
அறிவறி யாமை யாரும் அறியார்

அறிவறி யாமை கடந்தறி வானால்
அறிவறி யாமை யழகிய வாறே

2363
அறிவறி யாமையை நீவி யவனே
பொறிவா யொழிந்தெங்குந் தானான போது
அறிவா யவற் றினுள் தானா யறிவின்
செறிவாகி நின்றவன் சீவனு மாமே

2364
அறிவுடை யார்நெஞ் சகலிட மாவ
தறிவுடை யார்நெஞ் சருந்தவ மாவ
தறிவுடை யார்நெஞ்சொ (1)டாதிப் பிரானும்
அறிவுடை யார்நெஞ்சத் தங்குநின் றானே
(1) டாதிப் பகவானும்

2365
(1)மாயனு மாகி மலரோன் இறையுமாய்க்
காயநன் னாட்டுக் கருமுத லானவன்
சேயன் அணியன் தித்திக்குந் தீங்கரும்
பாயமு தாகிநின் றண்ணிக்கின் றானே
(1) மாயனுமாய

2366
என்னை யறிந்திலேன் இத்தனை காலமும்
என்னை யறிந்தபின் ஏதும் அறிந்திலேன்

என்னை (1)யறிந்திட் டிருத்தலுங் கைவிடா
தென்னை (2)யிட்டென்னை உசாவுகின் றானே
(1) அறியும் அறிவை அறிந்தபின்
(2) விட் டுன்னை

2367
மாய விளக்கது நின்று மறைந்திடுந்
தூய விளக்கது நின்று சுடர்விடுங்
காய விளக்கது நின்று கனன்றிடுஞ்
சேய விளக்கினைத் தேடுகின் றேனே

2368
தேடுகின் றேன்திசை யெட்டோ டிரண்டையும்
நாடுகின் றேனல மேயுடை யானடி
பாடுகின் றேன்பர மேதுணை யாமெனக்
கூடுகின் றேன்குறை யாமனத் தாலே

2369
முன்னை முதல்விளை யாட்டத்துமுன்வந்தோர்
பின்னைப் பெருமலம் வந்தவர் பேர்த்திட்டுத்
தன்னைத் தெரிந்துதன் பண்டைத் தலைவன்தான்
மன்னிச் சிவமாக வாரா பிறப்பே

## 15: ஆறந்தம்

2370

வேதத்தின் அந்தமும் மிக்கசித் தாந்தமும்
நாதத்தின் அந்தமும் நற்போத அந்தமும்
ஓதத் (1)தகுமெட் டியோகாந்த அந்தமும்
ஆதிக்க (2)லாந்தமும் ஆறந்த மாமே
(1) தருமெட்டின்
(1) தகுமெட்டின்
(2) லாந்தமொடாறந்த

2371

அந்தமோ ராறும் அறிவார் (1)அதிசுத்தர்
அந்தமோ ராறும் (2)அறிவார் அமலத்தர்
அந்தமோ ராறும் (3)அறியார் அவர்தமக்
கந்தமோ டாதி அறியவொண் ணாதே
(1) அமலத்தர்
(2) அறியார் மலத்தர்
(3) அறியா தவர்தமக்

2372

தானான வேதாந்தந் தானென்னுஞ் சித்தாந்த
மானாத் துரியத் தணுவன் றனைக்கண்டு
தேனார் பராபரஞ் (1)சேர்சிவ யோகமாய்

ஆனா மலமற் றருஞ்சித்தி யாதலே
(1) சேரச் சிவோகமாய்

2373
நித்தம் பரனோ (1)டுயிருற்று நீள்மனஞ்
சத்த முதல் (2)ஐந்துந் தத்துவத் தால்நீங்கிச்
சுத்த மசுத்தந் தொடரா வகைநினைந்
தத்தன் பரன்பால் அடைதல்சித் தாந்தமே
(1) டிருந்து
(2) ஐந்து தத்துவந் தானீங்கிச்

2374
மேவும் பிரமனே விண்டு உருத்திரன்
(1)மேவுசெய் யீசன் சதாசிவன் மிக்கப்பால்
மேவும் பரவிந்து நாதம் (2)விடாவாறா
றோவும் பொழுதணு வொன்றுள (3)தாமே
(1) மேவுமெய்
(1) மேவுமே யீசன்
(2) விடருனா
(3) தாகுமே

2375
உள்ள வுயிராறாற தாகும் உபாதியைத்
தெள் ளி யகன்று (1)நாதாந்தத்தைச் செற்றுமேல்
உள்ள இருள்நீங்க வோருணர் வாகுமேல்
(2)எள்ளலின் நாதாந்தத் தெய்திடும் போதமே

(1) நாதாந்தம்
(1) எள் ளிடின் நாதாந்தத் தேற் றிடும்

2376
தேடும் இயம நியமாதி சென்றகன்
றூடுஞ் சமாதியில் உற்றுப் (1)பரசிவன்
பாடுறச் சீவன் பரமாகப் பற்றறக்
கூடும் உபசாந்தம் யோகாந்தக் கொள்கையே
(1) படர்சிவன்

2377
கொள்கையி லான கலாந்தங் குறிக்கொள் ளில்
விள்கையி லான நிவிர்த்தாதி மேதாதிக்
குள்ளன வாம் (1)விந்து வுள்ளே யொடுங்கலுந்
தெள் ளி யதனைத் தெளிதலு மாமே
(1) விந்து முள்ளே

2378
தெளியு மிவையன்றித் தேரைங் கலைவே
றொளியுள் அமைத்துள்ள தோரவல் லார்கட்
களியவ னாகிய மந்திரந் தந்திரந்
(1)தெளிவுப தேச ஞானத்தொ டைந்தாமே
(1) தெளியவு

2379
ஆகும் அனாதி கலையா கமவேதம்

ஆகுமத் தந்திர மந்நூல் வழிநிற்றல்
ஆகு மனாதி யுடலல்லா மந்திரம்
ஆகுஞ் சிவபோ தகம் உப தேசமே

2380
தேசார் (1)சிவமாகுந் தன்ஞானத் தின்கலை
ஆசார நேய மறையுங் கலாந்தத்துப்
பேசா வுரையுணர் வற்ற பெருந்தகை
வாசா மகோசர மாநந்தி தானே
(1) சிவமாகு

2381
தானவ னாகுஞ் சமாதி தலைப்படில்
ஆன கலாந்தநா தாந்தயோ காந்தமும்
ஏனைய போதாந்தம் சித்தாந்த மானது
ஞான மெனஞேய ஞாதுரு வாகுமே

2382
ஆறந்த (1)முஞ்சென் றடங்குமந் நேயத்தே
ஆறந்த (2)ஞேயம் அடங்கிடு ஞாதுரு
கூறிய ஞானக் குறியுடன் வீடவே
தேறிய மோனஞ் (3)சிவானந்த மாமே
(1) முன்சென்
(2) மேய மடங்கிடு
(3) சிவானந்த வுண்மையே

2383

உண்மைக் கலையாறோ ரைந்தான் அடங்கிடும்
உண்மைக் கலாந்தம் இரண்டைந்தோ டேழந்தம்
உண்மைக் கலையொன்றில் ஈறாய நாதாந்தத்
துண்மைக் கலைசொல்ல வோரந்த மாமே

2384

ஆவுடை யாளை யரன்வந்து கொண்டபின்
தேவுடை யானெங்கள் சீர்நந்தி தாடந்து
வீவற வேதாந்த சித்தாந்த மேன்மையைக்
கூவி யருளிய கோனைக் கருதுமே

2385

கருது மவர்தங் கருத்தினுக் கொப்ப
அரனுரை செய்தருள் ஆகமந் தன்னில்
வருசம யப்புற மாயைமா மாயை
உருவிய வேதாந்த சித்தாந்த வுண்மையே

2386

(1)வேதாந்தஞ் சித்தாந்தம் வேறிலா முத்திரை
போதாந்த ஞானம் யோகாந்தம் பொதுஞேய
நாதாந்தம் ஆனந்தஞ் சீரோ தயமாகும்
மூதாந்த முத்திரை மோனத்து மூழ்கவே
(1) வேதாந்த

2387

வேதாந்தந் தன்னில் உபாதிமே லேழ்விட
நாதாந்த பாசம் விடுநல்ல தொம்பதம்
மீதாந்த காரணோ பாதியேழ் மெய்ப்பரன்
போதாந்த தற்பதம் போமசி என்பவே

2388
அண்டங்கள் ஏழுங் கடந்தகன் றப்பாலும்
உண்டென்ற பேரொளிக் குள்ளா முளவொளி
பண்டுறு நின்ற பராசத்தி யென்னவே
கொண்டவ னன்றிநின் (1)றான்தங்கள் கோவே
(1) றன் எங்கள்

2389
கோவுணர்த் துஞ்சத்தி யாலே குறிவைத்துத்
தேவுணர்த் துங்கரு மஞ்செய்தி செய்யவே
பாவனைத் தும்படைத் தர்ச்சனை (1)பாரிப்ப
ஓவனைத் துண்டொழி யாத ஒருவனே
(1) பாலிப்ப

2390
ஒருவனை யுன்னார் உயிர்தனை யுன்னார்
இருவினை யுன்னார் இருமாயை யுன்னார்
ஒருவனு மேயுள் ளுணர்த்திநின் றூட்டி
அருவனு மாகிய ஆதரத் தானே

2391

அரனன்பர் தானம தாகிச் சிவத்து
வருமவை சத்திகள் முன்னா வகுத்திட்
டுரனுற சந்நிதி சேட்டிப்ப என்றுந்
திரனுறு தோயாச் சிவாநந்தி (1)யாமே
(1) யாகுமே

2392
வேதாந்த தொம்பத மேவும் பசுவென்ப
நாதாந்த பாசம் விடநின்ற நன்பதி
போதாந்த தற்பதம் போயிரண் டயிக்கியஞ்
சாதா ரணஞ்சிவ சாயுச்சிய மாமே

2393
(1)சிவமாதல் வேதாந்த சித்தாந்த மாகும்
அவமவ மாகு மவ்வவ் விரண்டுஞ்
சிவமாஞ் சதாசிவன் செய்தொன்றா னானால்
நவமான வேதாந்த ஞானசித் தாந்தமே
(1) சிவமான

2394
சித்தாந்தத் தேசீவன் முத்திசித் தித்தலாற்
சித்தாந்தத் தேநிற்போர் முத்திசித் தித்தவர்
சித்தாந்த வேதாந்தஞ் செம்பொரு ளாதலால்
சித்தாந்த வேதாந்தங் காட்டுஞ் சிவனையே

2395

சிவனைப் (1)பரமனுட் சீவனுட் காட்டும்
அவமற்ற வேதாந்த சித்தாந்த மானான்
நவமுற் றவத்தையில் ஞானஞ் சிவமாந்
தவமிக் குணர்ந்தவர் தத்துவத் தாரே
(1) பரனுட்

2396

தத்துவ மாகுஞ் சகள வகளங்கள்
தத்துவ மாம்விந்து நாதஞ் சதாசிவந்
தத்துவ மாகுஞ் சீவன்றன் தற்பரந்
தத்துவ மாஞ்சிவ சாயுச் சியமே

2397

வேதமோ டாகமம் மெய்யாம் (1)இறைவநூல்
ஓதும் (2)பொதுவுஞ் சிறப்புமென் றுள்ளன
நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே
(1) இறைநூல்
(2) சிறப்பும் பொதுவுமென்

2398

பரானந்தி மன்னுஞ் சிவானந்தம் எல்லாம்
பரானந்த மேன்மூன்றும் பாழுறா னந்தம்
விராமுத்தி ரானந்த (1)மெய்ன்னட னானந்தம்
பொராநின்ற வுள்ளமே பூரிப்பி யாமே
(1) மென்னட

2399

ஆகுங் கலாந்தம் இரண்டந்த நாதாந்தம்
ஆகும் பொழுதிற் கலையைந்தா மாதலில்
ஆகும் அரனேபஞ் சாந்தக னாமென்ன
ஆகு மறையா கமமொழிந் தானன்றே

2400

அன்றாகு மென்னாதை வகையந்தத் தன்னை
ஒன்றான வேதாந்த சித்தாந்த முள் ளிட்டு
நின்றா லியோகாந்த நேர்படு நேர்பட்டான்
மன்றாடி பாத மருவலு மாமே

2401

அனாதி சீவனைம் மலமற்றப் பாலாய்
அனாதி யடக்கித் தனைக்கண் டரனாய்த்
தானதி மலங்கெடத் தத்துவா தீதம்
வினாவுநீர் பாலாதல் வேதாந்த வுண்மையே

2402

உயிரைப் பரனை யுயர்சிவன் தன்னை
அயர்வற் றறிதொந் தத்தசி யதனாற்
செயலற் றறிவாகி யுஞ்சென் றடங்கி
அயர்வற்ற வேதாந்த சித்தாந்த மாமே

2403

மன்னிய சோகமா மாமறை யாளர்தஞ்
சென்னிய தான (1)சிவயோகமாம் ஈதென்ன
அன்னது சித்தாந்த மாமறை யாய்பொருள்
துன்னிய ஆகம நூலெனத் தோன்றுமே
(1) சிவோகமாம்

2404
முதலாகும் வேத முழுதா கமமப்
பதியான ஈசன் பகர்ந்த திரண்டு
முதிதான வேத முறைமுறை யாலமர்ந்
ததிகாதி வேதாந்த சித்தாந்த (1)மாகவே
(1) மாகமே
(1) மாமே

16: பதிபசுபாசம் வேறின்மை

2405
அறிவறி வென்ற அறிவு மனாதி
அறிவுக் கறிவாம் பதியும் அனாதி
அறிவினைக் கட்டிய பாசம் அனாதி
அறிவு பதியிற் பிறப்பறுந் தானே

2406

பசுப்பல கோடி பிரமன் முதலாய்ப்
பசுக்களைக் கட்டிய பாசமுன் றுண்டு
பசுத்தன்மை நீக்கியப் பாசம் அறுத்தாற்
பசுக்கள் தலைவனைப் பற் றி விடாவே

2407

கிடக்கின்ற வாறே கிளர்பயன் மூன்று
நடக்கின்ற ஞானத்தை நாடோறு நோக்கித்
(1)தொடக் கொன்றும் இன்றித்தொழுமின் தொழுதாற்
குடக்குன்றி லிட்ட விளக்கது வாமே
(1) துடக்கொன்றும்

2408

பாசஞ்செய் தானைப் படர்சடை நந்தியை
நேசஞ்செய் தாங்கே நினைப்பர் நினைத்தலுங்
கூசஞ்செய் துன்னிக் குறிக்கொள்வ (1)தெவ்வண்ணம்
வாசஞ்செய் பாசத்துள்வைக்கின்ற வாறே
(1) தவ்வண்ணம்

2409

விட்ட விடமேறா வாறுபோல் வேறாகி
விட்ட பசுபாச மெய்கண்டோன் மேவுறான்
கட்டிய கேவலங் காணுஞ் சகலத்தைச்
சுட்டு நனவில் அதீதத்துள் தோன்றுமே

2410
நாடும் பதியுடன் நற்பசு பாசமும்
நீடுமா நித்தன் நிலையறி வாரில்லை
நீடிய நித்தம் பசுபாச நீக்கமும்
நாடிய சைவர்க்கு நந்தி யளித்ததே

2411
ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவும் அடலே றெனநிற்கும்
ஆய பலிபீட மாகுநற் பாசமாம்
ஆய அரனிலை யாய்ந்துகொள் வார்கட்கே

2412
பதிபசு பாசம் பயில்வியா நித்தம்
பதிபசு பாசம் பகர்வோர்க் காறாக்கிப்
பதிபசு பாசத்தைப் பற்றற நீக்கும்
பதிபசு பாசம் பயில நிலாவே

2413
பதியும் பசுவொடு பாசமும் மேலைக்
கதியும் பசுபாச நீக்கமுங் காட்டி
மதிதந்த வானந்த மாநந்தி காணுந்
துதிதந்து வைத்தனன் சுத்தசை வத்திலே

2414

அறிந்தணு மூன்றுமே யாங்கணு மாகும்
அறிந்தணு மூன்றுமே யாங்கணு (1)மாக
அறிந்த அனாதி வியாத்தனு (2)மாவன்
அறிந்த பதிபடைப் பானங் கவற்றையே
(1) வாகும்
(1) மாகில்
(2) மாகில்

2415
படைப்பாதி யாவது (1)பரஞ்சிவஞ் சத்தி
இடைப்பால் உயிர்கட் கடைத்திவை தூங்கல்
படைப்பாதி சூக்கத்தைத் தற்பரஞ் செய்யப்
படைப்பாதி தூய மலமப் பரத்திலே
(1) பரசிவஞ்

2416
ஆகிய சூக்கத்தை யவ்விந்து நாதமும்
ஆகிய சத்தி சிவபர மேலைந்தால்
ஆகிய சூக்கத்தில் ஐங்கரு மஞ்செய்வோன்
ஆகிய தூயவீ சானனு மாமே

2417
மேவும் (1)பரசிவ மேற்சத்தி நாதமும்
மேவும் பரவிந்து ஐம்முகன் வேறீசன்
மேவும் உருத்திரன் மால்வேதா மேதினி
ஆகும் படிபடைப் போனர னாமே

(1) பரஞ்சிவ

2418

படைப்பு மளிப்பும் பயிலிளைப் பாற்றுந்
துடைப்பு மறைப்புமுன் தோன்ற அருளுஞ்
சடத்தை விடுத்த அருளுஞ் சகலத்
(1)தடைத்த அனாதியை ஐந்தென லாமே
(1) தடத்தவ னாதியை

2419

ஆறாறு குண்டலி தன்னின் அகத்திட்டு
வேறாகு மாயையின் முப்பான் மிகுத்திட்டங்
கிறாங் கருவி யிவற்றால் வகுத்திட்டு
வேறாம் பதிபசு பாசம்வீ டாகுமே

2420

வீட்கும் பதிபசு பாசமும் மீதுற
வாட்கும் இருவினை யாங்கவற் றாலுணர்ந்
தாட்கு நரக சுவர்க்கத்திற் றானிட்டு
நாட்குற நான்தங்கு நற்பாச நண்ணுமே

2421

நண்ணிய பாசத்தில் நானெனல் ஆணவம்
பண்ணிய மாயையில் ஊட்டற் பரிந்தனன்
கண்ணிய சேதனன் கண்வந்த பேரருள்
அண்ணல் அடிசேர் உபாயம தாகுமே

2422
ஆகும் உபாயமே யன்றி யழுக்கற்று
மோக மறச்சுத்த னாதற்கு மூலமே
ஆகு மறுவை யழுக்கேற் றி யேற்றல்போல்
ஆகுவ தெல்லாம் அருட்பாச மாகுமே

2423
பாசம் பயிலுயிர் தானே பரமுதல்
பாசம் பயிலுயிர் தானே பசுவென்ப
பாசம் பயிலப் பதிபர மாதலாற்
பாசம் பயிலப் (1)பதிபசு வாகுமே
(1) பதிபதி யாகுமே

2424
அத்தத்தில் உத்தரங் கேட்ட அருந்தவர்
அத்தத்தில் உத்தர மாகும் அருள்மேனி
அத்தத்தி னாலே யணையப் பிடித்தலும்
அத்தத்தில் தம்மை யடைந்துநின் றாரே

17: (1)அடித்தலை யறியும்திறங்கூறல்
(1) அடிதலை

2425

காலுந் தலையும் அறியார் (1)கலதிகள்
காலந்தச் சத்தி யருளென்பர் காரணம்
பாலொன்று ஞானமே பண்டார் தலையுயிர்
காலந்த ஞானத்தைக் காட்டவீ டாகுமே
(1) கலாதிகள்

2426

தலையடி யாவ தறியார் காயத்தில்
தலையடி யுச்சியில் உள்ளது மூலந்
தலையடி யான அறிவை யறிந்தோர்
தலையடி யாகவே தானிருந் தாரே

2427

நின்றான் நிலமுழு தண்டமும் மேலுற
வன்றாள் அசுரர் அமரரும் உய்ந்திடப்
பின்றான் உலகம் படைத்தவன் பேர்நந்தி
தன்றா ளிணையென் தலைமிசை யானதே

2428

சிந்தையி னுள்ளே எந்தை திருவடி
சிந்தையும் எந்தை திருவடிக் கீழது
எந்தையும் என்னை யறியகி லானாகில்
எந்தையை யானும் அறியகி லேனே

2429

பன்னாத பாரொளிக் கப்புறத் தப்பால்
என்னா யகனார் இசைந்தங் கிருந்திட
முன்னா ஒளியு முரைசெய்யா மந்திரஞ்
சொன்னான் கழலிணை சூடிநின் றேனே

2430

பதியது தோற்றும் பதமது வைம்மின்
மதியது செய்து மலர்ப்பத மோது
நதிபொதி (1)யுஞ்சடை நாரியோர் பாகன்
கதிசெயுங் காலங்கள் கண்டுகொ ளீரே
(1) செஞ்சடை

2431

தரித்துநின் றானடி தன்னிட நெஞ்சில்
தரித்துநின் றானம ராபதி நாதன்
கரித்துநின் றான்கரு தாதவர் சிந்தை
பரித்துநின் றானப் பரிபாகத் தானே

2432

ஒன்றுண்டு தாமரை யொண்மலர் மூன்றுள
(1)தன்றாதை தாளும் இரண்டுள காயத்துள்
நன்றாகக் காய்ச்சிப் பதஞ்செய வல்லார்கட்
கின்றேசென் றீசனை யெய்தலு மாமே
(1) கன்றாத

2433

கால்கொண்டேன் சென்னியிற் கட்டறக் கட்டற
மால்கொண்ட நெஞ்சின் மயக்கிற் றுயக்கறப்
பால்கொண்ட வென்னைப்பரன்கொள்ள (1)நாடினான்
மேல்கொண்டென் செம்மை விளம்பவொண் ணாதே
(1) ச் சாடினான்

2434

பெற்ற புதல்வர் (1)போற் பேணிய நாற்றமுங்
குற்றமுங் கண்டு குணங்குறை செய்யவோர்
பற்றைய வீச னுயிரது பான்மைக்குச்
செற்றமி லாச்செய்கைக் கெய்தின செய்யுமே
(1) பாற்

18: முக்குற்றம்

2435

முன்றுள குற்ற முழுது நலிவன
மான்றிருள் தூங்கி மயங்கிக் கிடந்தன
முன்றினை (1)நீங்கினர் நீக்கினர் நீங்காதார்
முன்றினுட் பட்டு முடிகின்ற வாறே

(1) நீங்கியே நீங்கினர்

2436
காமம் வெகுளி மயக்க மிவைகடிந்
தேமம் பிடித்திருந் தேனுக் கெறிமணி
ஓமெனும் ஓசையி னுள்ளே யுறைவதோர்
தாம மதனைத் தலைப்பட்ட வாறே

19: முப்பதம்

2437
தோன்றிய தொம்பதந் தற்பதஞ் சூழ்தர
ஏன்ற அசிபதம் இம்முன்றோ டெய்தினோன்
ஆன்ற பராபர மாகும் பிறப்பற
வேன்றனன் மாளச் சிவமா யிருக்குமே

2438
போதந் தனையுன்னிப் பூதாதி பேதமும்
ஓதுங் கருவிதொண் ணூறுடன் ஓராறு
பேதமும் நாதாந்தப் பெற் றியிற் கைவிட்டு
வேதஞ்சொல் தொம்பத மாகுதன் (1)மெய்ம்மையே

(1) மேன்மையே

2439

தற்பதம் என்றுந் துவம்பதந் தானென்றும்
நிற்ப தசியத்துள் நேரிழை யாள்பதஞ்
சொற்பதத் தாலுந் தொடரவொண் (1)ணாச்சிவன்
கற்பனை யின்றிக் கலந்துநின் றானே
(1) ணான்சிவன்

2440

அணுவும் பரமும் அசிபதத் தேய்ந்து
கணுவொன் றிலாத சிவமுங் கலந்தால்
இணையறு பால்தேன் அமுதென இன்பத்
(1)துணையது வாயுரை (2)யற் றிடத் தோன்றுமே
(1) துணையுறு
(2) யற் றிடந்

2441

தொம்பதந் தற்பதந் தோன்றும் அசிபதம்
நம்பிய சீவன் பரன்சிவ னாய்நிற்கும்
அம்பத மேலைச் சொரூபமா வாக்கியஞ்
செம்பொருள் ஆண்டருள் சீர்நந்தி தானே

2442

ஐம்ப தறியா தவரு மவர்சிலர்
உம்பனை நாடி யுரைமுப்ப தத்திடைச்

செம்பர மாகிய வாசி செலுத்திடத்
தம்பர யோகமாய்த் தானவ னாகுமே

2443
நந்தி யறிவும் நழுவில் அதீதமாம்
இந்தியஞ் சத்தாதி விடவிய னாகும்
நந்திய முன்றிரண் டொன்று நலமைந்து
நந்தி னனவாதி முட்டும் அனாதியே

2444
பரதுரி யத்து நனவு படியுண்ட
விரிவிற் கனவும் இதனுப சாந்தத்
துரிய சுழுனையு மோவுஞ் சிவன்பால்
அரிய துரியம் அசிபத மாமே

## 20: முப்பரம்

2445
தோன்றியென் னுள்ளே சுழன்றெழு கின்றதோர்
மூன்று (1)படிமண் டலத்து முதல்வனை
ஏன்றெய்தி யின்புற் றிருந்தே யிளங்கொடி

நான்று நலஞ்செய் நலந்தரு மாறே
(1) மடிமண்

2446

மன்று நிறைந்தது மாபர மாயது
நின்று நிறைந்தது நேர்தரு நந்தியுங்
கன்று நினைந்தெழு தாயென வந்தபின்
குன்று நிறைந்த குணவிளக் காமே

2447

ஆறாது தத்துவத் (1)தப்புறத் தப்பரங்
கூறா வுபதேசங் கூறிற் (2)சிவபரம்
வேறாய் வெளிப்பட்ட வேதப் பகவனார்
பேறாக ஆனந்தம் பேணும் பெருகவே
(1) தப்புரத்
(2) சிவபதம்

2448

பற்றறப் பற் றிற் பரம்பதி யாவது
பற்றறப் பற் றிற் பரனறி வேபரம்
பற்றறப் பற் றினிற் பற்றவல் லோர்கட்கே
பற்றறப் பற் றிற் பரம்பர மாமே

2449

பரம்பர மான பதிபாசம் பற்றாப்
பரம்பர மாகும் பரஞ்சிவ மேவப்

பரம்பர மான பரசிவா னந்தம்
பரம்பர மாகப் படைப்ப தறிவே

2450
நனவிற் கலாதியா நாலொன் றகன்று
தனியுற்ற கேவலந் தன்னில் தானாகி
நினைவுற் றகன்ற அதீகத்துள் நேயந்
தனையுற் றிடத்தானே தற்பர மாமே

2451
தற்கண்ட தூயமுந் தன்னில் விலாசமும்
பிற்காணுந் தூடணந் தானும் பிறழ்வுற்றுத்
தற்பரன் கால பரமுங் கலந்தற்ற
நற்பரா தீதமு நாடக ராதியே

## 21: பரலட்சணம்

2452
அதீதத்து ளாகி யகன்றவன் நந்தி
அதீதத்து ளாகி யறிவிலோன் ஆன்மா
மதிபெற் றிருள்விட்ட மன்னுயிர் ஒன்றாம்

பதியிற் பதியும் பரவுயிர் தானே

2453
ஆதியும் அந்தமும் இல்லா வரும்பதி
சோதிப் பரஞ்சுடர் தோன்றத்தோன் றாமையின்
நீதிய தாய்நிற்கும் நீடிய (1)வப்பர
போதம் உணர்ந்தவர் புண்ணியத் தோரே
(1) வப்பரம்

2454
துரியங் கடந்து துரியா தீதத்தே
அரிய வியோகங்கொண் டம்பலத் தாடும்
பெரிய பிரானைப் பிரணவக் கூபத்தே
துரியவல் லார்க்குத் துரிசில்லை தானே

2455
செம்மைமுன் னிற்பச் சுவேதந் திரிவபோல்
(1)அம்மெய்ப் பரத்தோ டணுவனுள் ளாயிடப்
பொய்ம்மைச் சகமுண்ட போத வெறும்பாழிற்
செம்மைச் சிவமேரு சேர்கொடி யாகுமே
(1) அம்மைப்

2456
வைச்ச கலாதி வருதத்து வங்கெட
வெச்ச இருமாயை வேறாக வேறுத்
துச்ச பரசிவ மாமுண்மை யோன்றவே

அச்சம் அறுத்தென்னை யாண்டனன் நந்தியே

2457
என்னை யறிய இசைவித்த என்னந்தி
என்னை யறிந்தறி யாத விடத்துய்த்துப்
பின்னை யொளியிற் (1)சொரூபம் புறப்பட்டுத்
தன்னை யளித்தான் தற்பர மாகவே
(1) சொருகிப்

2458
பரந்துஞ் சுருங்கியும் பார்புனல் வாயு
நிரந்த வளியொடு ஞாயிறு திங்கள்
அரந்த அரனெறி யாயது வாகித்
தரந்த விசும்பொன்று தாங்கிநின் றானே

2459
சத்தின் நிலையினில் தானான சத்தியுந்
தற்பரை யாய்நிற்குந் தானாம் பரற்குடல்
உய்த்தகு மிச்சையில் ஞானாதி பேதமாய்
நித்த நடத்து நடிக்குமா நேயத்தே

2460
மேலொடு கீழ்பக்க மெய்வாய்கண் ணாசிகள்
பாலிய விந்து பரையுட் பரையாகக்
கோலிய நான்கவை ஞானங் கொணர்விந்து
சீலமி லாவணுச் செய்திய தாமே

2461

வேறா மதன்தன்மை போலுமிக் காயத்தில்
ஆறாம் உபாதி யனைத்தாகுந் தத்துவம்
பேறாம் பரவொளி தூண்டும் பிரகாசமாய்
ஊறா யுயிர்த்துண் டுறங்கிடு மாயையே

2462

தற்பர மன்னுந் தனிமுதற் பேரொளி
சிற்பரந் தானே செகமுண்ணும் போதமுந்
தொற்பதந் தீர்பாழிற் சுந்தரச் சோதிபுக்
கப்புற மற்றதிங் கொப்பில்லை தானே

2463

பண்டை மறைகள் பரவான் உடலென்னுந்
துண்ட மதியோன் துரியாதீ தந்தன்னைக்
கண்டு பரனுமக் காரணோ பாதிக்கே
மிண்டி னவன்சுத்த னாகான் வினவிலே

2464

வெளிகால் கனலப்பு மேவுமண் (1)ணின்ற
தளியா கியதற் பரங்கா ணவன்றான்
வெளிகால் கனலப்பு மேவுமண் ணின்ற
வெளியாய சத்தி (2)யவன்வடி வாமே

(1) ணுண்டை

(1) ணுண்ட

(2) வியன்வடி

2465
மேருவி னோடே விரிகதிர் மண்டலம்
ஆர நினையும் அருந்தவ யோகிக்குச்
சீரார் தவஞ்செய்யிற் சிவனருள் தானாகும்
பேரவும் வேண்டாம் பிறிதில்லை தானே

## 22: முத்துரியம்

2466
நனவாதி மூன்றினிற் சீவ துரியந்
தனதாதி மூன்றினிற் பரதுரி யந்தான்
நனவாதி மூன்றி னிற்சிவ துரியமா
மினதாகுந் தொந்தத் தசிபதத் தீடே

2467
தானா நனவில் துரியந்தன் தொம்பதந்
தானாந் துரிய நனவாதி தான்மூன்றில்
ஆனாப் பரபத மற்ற தருநனா
வானான மேன்மூன்றுந் துரியம் அணுகுமே

2468

அணுவின் துரியத்து நான்கும தாகிப்
பணியும் பரதுரி யம்பயி னான்குந்
தணிவிற் பரமாகிச் சார்முத் துரியக்
கணுவிலிந் நான்குங் கலந்தவீ ரைந்தே

2469

ஈரைந் தவத்தை யிசைமுத் துரியத்துள்
நேரந்த மாக நெறிவழி யேசென்று
பாரந்த மான (1)பராபரத் தயிக்கியத்
தோரந்த மா(2)மிரு பாதியைச் சேர்த்திடே
(1) பராபரத் தயிக்கிய மோரந்த மாயிரேழு பாதியைச் செற் றிட்டே
(2) மிருகாதியைச்

2470

தொட்டே யிருமின் துரிய நிலத்தினை
எட்டா தெனினின் றெட்டும் இறைவனைப்
பட்டாங் கறிந்திடிற் பன்னா வுதடுகள்
தட்டா தொழிவதோர் தத்துவந் தானே

2471

அறிவா யசத்தென்னு மாறா றகன்று
(1)செறிவாய மாயை சிதைத்தரு ளாலே
பிறியாத பேரரு ளாயிடும் பெற் றி
நெறியான அன்பர் நிலையறிந் தாரே

(1) செறிவான

2472

நனவின் நனவாதி நாலாந் துரியந்
தனதுயிர் தொம்பத மாமாறு போல
வினையறு சீவன் நனவாதி யாகத்
தனைய பரதுரிய யந்தற் பதமே

2473

தொம்பதந் தற்பதஞ் சொன்முத் துரியம்போல்
நம்பிய முன்றாந் துரியத்து (1)நற்றாமம்
அம்புவி யுன்னா அதிசூக்க மப்பாலைச்
செம்பொருள் ஆண்டருள் சீர்நந்தி தானே
(1) நன்றாகும்

23: மும்முத்தி

2474

சீவன்றன் முத்தி யதீதம் பரமுத்தி
(1)ஒயுப சாந்தஞ் சிவமுத்தி யானந்த
மூவயின் முச்சொருப முத்திமுப் பாலதாய்

ஓவுறு தாரத்தில் உள்ளுநா தாந்தமே
(1) ஓவுப

2475

ஆவ தறியார் உயிர்பிறப் பாலுறும்
ஆவ தறியும் உயிரருட் பாலுறும்
ஆவதொன் றில்லை யகம்புறத் தென்றகன்
றோவு சிவனுடன் ஒன்றுதன் முத்தியே

2476

சிவமாகி மும்மல முக்குணஞ் செற்றுத்
தவமான மும்முத்தி தத்துவத் தயிக்கியத்
துவமா கியநெறி சோகமென் போர்க்குச்
சிவமாம் அமலன் (1)சிறந்தனன் தானே
(1) சிறந்தது

2477

சித்தியும் முத்தியுந் திண்சிவ மாகிய
சுத்தியும் முத்தீ தொலைக்குஞ் சுகானந்த
சத்தியும் மேலைச் சமாதியு மாயிடும்
பெத்தம் அறுத்த பெரும்பெரு மானே

24: முச்சொரூபம்

2478

ஏறிய வாறே மலமைந் திடைஅடைத்
தாறிய ஞானச் சிவோக மடைந்திட்டு
வேறு மெனமுச் சொரூபத்து வீடுற்றங்
கீறதிற் பண்டைப் பரனுண்மை செய்யுமே

2479

முன்றுள மாளிகை மூவர் இருப்பிடம்
முன்றினின் முப்பத் தாறு முதிப்புள
முன்றினி னுள்ளே முளைத்தெழுஞ் சோதியைக்
காண்டலுங் காயக் கணக்கற்ற வாறே

2480

உலகம் புடைபெயர்ந் தூழியும் போன
நிலவு சுடரொளி மூன்றுமொன் றாய
பலவும் பரிசொடு பான்மையுள் ஈசன்
அளவும் பெருமையு மாரறி வாரே

2481

பெருவாய் முதலெண்ணும் பேதமே பேதித்
தருவா யுருவாய் அருவுரு வாகிக்
குருவாய் வருஞ்சத்தி கோனுயிர்ப் (1)பன்மை
உருவா யுடனிருந் தொன்றாயன் றாமே

(1) பான்மை

2482

மணியொளி சோபை யிலக்கணம் (1)வாய்த்து
மணியென லாய்நின்ற வாறது போலத்
தணிமுச் சொருபாதி சத்தியாதி சாரப்
பணிவித்த பேர்நந்தி பாதம்பற் றாயே
(1) வாய்த்த

2483

கல்லொளி மாநிறஞ் சோபைக் கதிர்தட்ட
நல்ல மணியொன்றி னாடியொண் முப்பதஞ்
சொல்லறு முப்பாழிற் சொல்லறு பேருரைத்
தல்லறு முத்திராந் தத்தனு பூதியே

2484

உடந்தசெந் தாமரை யுள்ளூறு சோதி
நடந்தசெந் தாமரை நாதந் தகைந்தால்
அடைந்த பயோதரி யட்டி யடைத்தவ்
விடந்தரு வாசலை மேல்திற வீரே

## 25: முக்கரணம்

2485

இடனொரு மூன்றி லியைந்த வொருவன்
கடனுறு மவ்வுரு வேறேனக் காணுந்
திடமது போலச் சிவபர சீவர்
(1)உடனுறை பேதமும் ஒன்றென லாமே
(1) உடனுறு

2486

ஒளியை யொளிசெய்து வோமென் றெழுப்பி
வளியை வளிசெய்து வாய்த்திட வாங்கி
வெளியை வெளிசெய்து மேலெழ வைத்துத்
தெளியத் தெளியுஞ் சிவபதந் தானே

2487

முக்கர ணங்களின் மூர்ச்சைதீர்த் தாவதக்
கைக்கா ரணமென்னத் தந்தனன் காணந்தி
மிக்க மனோன்மனி வேறே தனித்தேக
ஒக்கும துன்மனி யோதுட் சமாதியே

26: முச்சூனிய தொந்தத்தசி(1)
(1) முச்சூனியம் தொந்தத்தசி

2488

தற்பதஞ் தொம்பதந் தானாம் அசிபதந்
தொற்பத மூன்றுந் துரியத்துத் தோற்றவே
நிற்ப துயிர்பர னிகழ்சிவ மும்மூன்றின்
சொற்பத மாகுந் தொந்தத் தசியே

2489

தொந்தத் தசிமுன்றில் தொல்கா மியமாதி
தொந்தத் தசிமுன்றில் தொல்தா மதமாதி
வந்த மலங்குண மாளச் சிவந்தோன்றின்
இந்துவின் முன்னிருள் ஏகுதல் ஒக்கமே

2490

தொந்தத் தசியையவ் வாசியில் தோற் றியே
அந்த முறையீ ரைந்தாக மதித்திட்டு
அந்த மிலாத அவத்தையவ் வாக்கியத்
துந்து முறையிற் சிவமுன்வைத் தோதிடே

2491

வைத்துச் சிவத்தை மதிசொரு பானந்தத்
துய்த்துப் பிரணவ மாம் உப தேசத்தை
மெய்த்த இதயத்து விட்டிடு மெய்யுணர்ந்
தத்தற் கடிமை யடைந்துநின் றானே

2492

தொம்பதம் மாயையுள் தோன்றிடுந் தற்பதம்
அம்பரை தன்னில் உதிக்கும் அசிபதம்
நம்புறு சாந்தியில் நண்ணுமவ் வாக்கியம்
உம்பர் உரைதொந்தத் தசிவாசி யாமே

2493

ஆகிய (1)வச்சோயந் தேவதத் தன்னிடத்
தாகிய (2)வைவிட்டாற் காயம் உபாதானம்
ஏகிய தொந்தத் தசியென்ப மெய்யறி
வாகிய சீவன் (3)பரசிவ னாமே
(1) வச்சோமன் தேய்வது
(2) யவ்விட் டாகாயம்
(3) பரன்சிவ

2494

தாமத காமிய மாகித் தகுகுண
மாமல மூன்றும் அகார வுகாரத்தோ
டாமறு மவ்வுமவ் வாயுடன் மூன்றில்
தாமாந் துரியமுந் தொந்தத் (1)தசியதே
(1) தசியவே

27: முப்பாழ்

2495

காரிய மேழ்கண் டறுமாயப் பாழ்விடக்
காரண மேழ்கண் டறும்போதப் பாழ்விடக்
காரிய காரண வாதனை கண்டறுஞ்
சீருப சாந்தமுப் பாழ்விடத் தீருமே

2496

மாயப்பாழ் சீவன் வியோமப்பாழ் மன்பரன்
சேயமுப் பாழெனச் சிவசத்தி யிற்சீவன்
ஆய வியாப்த மெனுமுப்பா ழாம் அந்தத்
தூய (1)சொரூபத்திற் சொல்முடி வாகுமே
(1) சொரூபத்தன்

2497

எதிரற நாளும் எருதுவந் தேறும்
பதியெனும் நந்தி பதமது கூடக்
கதியெனப் பாழைக் கடந்தந்தக் கற்பனை
உதறிய பாழில் ஒடுங்குகின் றேனே

2498

துரியம் அடங்கிய சொல்லறும் பாழை
அரிய (1)பரம்பரம் என்பர்கள் ஆதர்
அரிய (1)பரம்பரம் என்றே துதிக்கும்
அருநிலம் என்பதை யாரறி வாரே

(1) பராபரம்

2499

ஆறாறு நீங்க நமவாதி யகன்றிட்டு
வேறா கியபரை யாவென்று மெய்ப்பரன்
ஈறான வாசியிற் கூட்டு மதுவன்றோ
தேறாச் சிவாய நமவெனத் தேறிலே

2500

உள்ளம் உருவென்றும் உருவம் உளமென்றும்
உள்ள பரிசறிந் தோரு மவர்கட்குப்
பள்ளமும் இல்லை திடரில்லை பாழில்லை
உள்ளமும் இல்லை உருவில்லை தானே

28: காரிய காரணவுபாதி(1)
(1) காரணவுபாதி

2501

செற் றிடுஞ் சீவ வுபாதித் திறனேழும்
பற்றும் பரோபாதி ஏழும் பகருரை
உற் றிடுங் காரிய காரணத் தோடற

அற் றிட வச்சிவ மாகும் அணுவனே

2502

ஆறாறு காரியோ பாதி யகன்றிட்டு
வேறாய் நனவு மிகுத்த கனாநனா
ஆறா றகன்ற சுழுத்தி யதில் எய்தாப்
பேறா நிலத்துயிர் தொம்பதம் பேசிலே

2503

அகாரம் உயிரே உகாரம் பரமே
மகாரஞ் (1)சிவமாய் (2)வருமுப் பதத்துச்
சிகாரஞ் (3)சிவமே வகாரம் பரமே
அகாரம் உயிரென் றறையலு மாமே
(1) மலமாய்
(2) வருமுப்பத்தாறிற்
(3) சிவமாய் வகாரம் வடிவமாய்

2504

உயிர்க்குயி ராகி யொழிவற் றழிவற்
றயிர்ப்பறு காரணோ பாதி விதிரேகத்
துயிர்ப்புறும் ஈசன் உபமிதத் தாலன்றி
வியர்ப்புறும் ஆணவம் வீடல்செய் யாவே

2505

காரியம் ஏழிற் கலக்கும் கடும்பசு
காரணம் ஏழிற் கலக்கும் பரசிவன்

காரிய காரணங் கற்பனை சொற்பதப்
பாரறும் பாழில் பராபரத் தானே

29: உபசாந்தம்

2506
முத்திக்கு வித்து முதல்வன்தன் (1)ஞானமே
பத்திக்கு வித்துப் பணிந்துற்றுப் பற்றலே
சித்திக்கு வித்துச் சிவபரந் தானாதல்
சத்திக்கு வித்துத் தனதுப சாந்தமே
(1) நாமமே

2507
காரியம் ஏழுங் கரந்திடு மாயையுள்
காரணம் ஏழுங் கரக்குங் கடுவெளி
காரிய காரண வாதனைப் பற்றறப்
பாரண வும்முப சாந்தப் பரிசிதே

2508
அன்ன துரியமே யாத்துமே சுத்தியும்
முன்னிய சாக்கிரா தீதத் துறுபுரி

மன்னு பரங்காட்சி யாவ துடனுற்றுத்
தன்னின் வியாத்தி தனின் உப சாந்தமே

2509

ஆறா றமைந்தாண வத்தையுள் (1)நீக்குதற்
பேறான தன்னை யறிதற்பின் றீர்சுத்தி
(2)கூறாத சாக்கிரா தீதங் குருபரன்
பேறாம் வியாத்தம் பிறழுப சாந்தமே
(1) நீங்குதற்
(2) கூறான

2510

வாய்ந்த வுபசாந்த வாதனை யுள்ளப்போய்
ஏய்ந்த சிவமாத லின்சிவா னந்தத்துத்
தோய்ந்தறல் மோனச் சுகானுபவத் தோடே
ஆய்ந்ததில் தீர்க்கை யானதீ ரைந்துமே

2511

பரையின் பரவ பரத்துடன் ஏகமாய்த்
திரையினின் றாகிய தெண்புனல் போலவுற்
றுரையுணர்ந் தாரமு (1)தொக்க வுணர்ந்துளோன்
கரைகண் டானுரை யற்ற கணக்கிலே
(1) மொக்க

## 30: புறங்கூறாமை

2512

பிறையுட் கிடந்த முயலை ஏறிவான்
அறைமணி வாட்கொண் டவர்தமைப் போலக்
கறைமணி கண்டனைக் காண்குற மாட்டார்
நிறையறி வோமென்பர் நெஞ்சிலர் தாமே

2513

கருந்தாட் கருடன் விசும்பூ டிறப்பக்
கருந்தாட் கயத்திற் கரும்பாம்பு நீங்கப்
பெருந்தன்மை பேசுதி நீயொழி நெஞ்சே
அருந்தா அலைகட லாறுசென் றாலே

2514

கருதலர் மாளக் கருவாயில் நின்ற
பொருதலைச் செய்வது புல்லறி வாண்மை
மருவலர் செய்கின்ற மாதவம் ஒத்தால்
தருவலர் கேட்ட தனியும்ப ராமே

2515

பிணங்கவும் வேண்டாம் பெருநில முற்றும்
இணங்கியெம் மீசனே யீசனென் றுன்னிற்

கணம்பதி னெட்டுங் கழலடி காண
வணங்கெழு நாடியங் கன்புற லாமே

2516
என்னிலும் என்னுயி ராய இறைவனைப்
பொன்னிலு மாமணி யாய புனிதனை
மின்னிய (1)வெவ்வுயி ராய விகிர்தனை
உன்னிலும் உன்னும் உறுவகை யாலே
(1) லெவ்வுயி
(1) லவ்வுரு வாய

2517
நின்றும் இருந்துங் கிடந்தும் நிமலனை
ஒன்றும் பொருள்கள் உரைப்பவ ராகிலும்
வென்றைம் புலனும் விரைந்து பிணக்கறுத்
தொன்றா யுணரும் ஒருவனு மாமே

2518
நுண்ணறி வாயுல காயுல கேழுக்கும்
எண்ணறி வாய்(1)நின்ற எந்தை பிரான்தன்னைப்
பண்ணறி வாளனைப் பாவித்த மாந்தரை
விண்ணறி வாளர் விரும்புகின் றாரே
(1) நிறை

2519
விண்ணவ ராலும் அறிவறி யான்றன்னைக்

கண்ணற வுள்ளே கருதிடிற் காலையில்
எண்ணுற வாகமுப் போது மியற் றிநீ
பண்ணிடில் தன்மை பராபர னாமே

2520
ஒன்றா யுலகுடன் ஏழும் பரந்தவன்
பின்றா னருள்செய்த பேரரு ளாளவன்
கன்றா மனத்தார்தங் கல்வியுள் நல்லவன்
பொன்றாத போது புனைபுக ழானே

2521
போற் றியென் றேன் எந்தை பொன்னான சேவடி
(1)ஏற் றியே (2)தென்றும் எறிமணி தானகக்
காற் றின் விளக்கது காய மயக்குறு
மாற்றலுங் கேட்டது மன்றுகண் டேனே
(1) ஏற் றிய
(1) போற் றிய
(2) சென்றும்

2522
நேடிக்கொண் டென்னுள்ளே நேர்தரு நந்தியை
ஊடுபுக் காரும் உணர்ந்தறி வாரில்லை
கூடுபுக் கேறலுற் றேனவன் கோலங்கண்
முடிக்கண் டேனுல கேழுங்கண் டேனே

2523

ஆன புகழும் அமைந்ததோர் ஞானமுந்
தேனு மிருக்குஞ் சிறுவரை யொன்றுகண்
டூனமொன் றின்றி யுணர்வுசெய் வார்கட்கு
வானகஞ் செய்யு மறவனு மாமே

2524

மாமதி யாமதி யாய்நின்ற மாதவர்
தூய்மதி யாகுஞ் சுடர்பர மானந்தந்
தாமதி யாகச் சகமுணச் சாந்திபுக்
காமல மற்றார் அமைவுபெற் றாரே

2525

பதமுத்தி மூன்றும் பழுதென்று கைவிட்
டிதமுற்ற பாச இருளைத் துரந்து
மதமற் றெனதியான் மாற் றிவிட் டாங்கே
திதமுற் றவர்கள் சிவசித்தர் தாமே

2526

சித்தர் சிவத்தைக் கண்டவர் சீருடன்
சுத்தாசுச் தத்துடன் தோய்ந்துந்தோ யாதவர்
முத்தரம் முத்திக்கு மூலத்தர் மூலத்துச்
சத்தர் சதாசிவத் தன்மையர் தாமே

## 31: எட்டிதழ்க் கமல முக்குண அவத்தை

2527

உதிக்கின்ற இந்திரன் அங்கி யமனுந்
துதிக்கும் நிருதி வருணநல் வாயு
மதிக்குங் குபேரன் வடதிசை யீசன்
நிதித்தெண் டிசையு நிறைந்துநின் (1)றாரே
(1) றானே

2528

ஒருங்கிய பூவமோ ரெட்டித ழாகும்
மருங்கிய மாயா புரியத னுள்ளே
சுருங்கிய தண்டின் சுழுனையி னூடே
ஒருங்கிய சோதியை ஓர்ந்தெழும் உய்ந்தே

2529

மொட்டலர் தாமரை முன்றுள முன்றினும்
விட்டலர் கின்றனன் சோதி விரிசுடர்
எட்டல ருள்ளே இரண்டலர் உள்ளூறிற்
பட்டலர் கின்றதோர் பண்டங் கனாவே

2530

ஆறே யருவி யகங்குளம் ஒன்றுண்டு
நூறே சிவகதி நுண்ணிது வண்ணமுங்

கூறே குவிமுலைக் கொம்பனை யாளொடும்
வேறே யிருக்கும் விழுப்பொருள் தானே

2531
திகையெட்டுந் தேரெட்டுந் தேவதை யெட்டும்
வகையெட்டு மாய்நின்ற ஆதிப் பிரானை
வகையெட்டு நான்குமற் றாங்கே நிறைந்து
முகையெட்டும் உள்நின் றுதிக்கின்ற வாறே

2532
ஏழுஞ் சகளம் இயம்புங் கடந்தெட்டில்
வாழும் பரமென் றதுகடந் தோன்பதில்
ஊழி பராபரம் ஓங்கிய பத்தினில்
தாழ்வது வான தனித்தன்மை தானே

2533
பல்லூழி பண்பன் பகலோன் இறையவன்
நல்லூழி ஐந்தினுள் ளேநின்ற வூழிகள்
செல்லூழி யண்டத்துச் சென்றவவ் வூழியுள்
அவ்வூழி யுச்சியு ளொன்றிற் பகவனே

2534
புரியும் உலகினிற் பூண்டவெட் டானை
திரியுங் (1)களிற்றொடு தேவர் குழாமும்
எரியு மழையும் இயங்கும் வெளியும்
பரியுமா காசத்திற் பற்றது தானே

(1) களிறொடு

2535

ஊறு மருவி யுயர்வரை யுச்சிமேல்
ஆறின்றிப் பாயும் அருங்குளம் ஒன்றுண்டு
சேறின்றிப் பூத்த செழுங்கொடித் தாமரைப்
பூவின்றிச் சூடான் புரிசடை யோனே

2536

ஒன்றும் இரண்டும் ஒருங்கிய காலத்து
நின்றும் இருந்தும் நிலம்பல பேசினும்
வென்று மிருந்து விகிர்தனை நாடுவர்
சென்றும் இருந்துந் திருவடை யோரே

## 32: ஒன்பான் அவத்தை — ஒன்பான் அபிமானி

2537

தொற்பத விசுவன் றைசதன் பிராஞ்ஞன்
நற்பத விராட்டன்பொன் கர்ப்பனவ் யாகிர்தன்
பிற்பதஞ் (1)சொலிதையன் பிரசா பத்தியன்
பொற்புவி சாந்தன் பொருதபி மானியே

(1) சிற்சொலிதை

2538

நவமா மவத்தை நனவாதி பற் றிற்
பவமா மலங்குணம் பற்றற்றுப் பற்றாத்
தவமான சத்திய ஞானப் பொதுவிற்
றுவமார் துரியஞ் சொரூபம தாமே

2539

சிவமான சிந்தையிற் சீவன் சிதைய
பவமான மும்மலம் பாறிப் பறிய
நவமான அந்தத்தின் நற்சிவ போதந்
தவமா மவையாகித் தானல்ல வாகுமே

2540

முன்சொன்ன வொன்பானின் முன்னுறு தத்துவந்
தன்சொல்லில் எண்ணத்தகாவொன்பான் வேறுள
பின்சொல்ல லாகுமிவ் வீரொன்பான் பேர்த்திட்டுத்
தன்செய்த வாண்டவன் றான்சிறந் தானே

2541

உகந்தன ஒன்பதும் ஐந்தும் உலகம்
பகர்ந்த பிரானென்னும் பண்பினை நாடி
அகந்தெம் பிரானென்பன் அல்லும் பகலு
மிகந்தன வல்வினை யோடறுத் தானே

2542

நலம்பல காலந் தொகுத்தன நீளங்
குலம்பல வண்ணங் குறிப்பொடுங் கூடும்
பலம்பல பன்னிரு கால நினையும்
நிலம்பல வாறின னீர்மையன் றானே

2543

ஆதி பராபர மாகும் பராபரை
சோதி பரமுயிர் சொல்லுநற் றத்துவம்
ஓதுங் கலைமாயை யோரிரண் டோர்முத்தி
நீதியாம் பேதமோன் பானுடன் ஆதியே

2544

தேறாத சிந்தை தெளியத் தெளிவித்து
வேறா நரக சுவர்க்கமும் மேதினி
ஆறாப் பிறப்பும் உயிர்க்கரு ளால்வைத்தான்
வேறாத் தெளியார் வினையுயிர் பெற்றதே

2545

ஒன்பான் அவத்தையுள் ஒன்பான் அபிமானி
நன்பாற் பயிலு நவதத் துவமாதி
ஒன்பானில் நிற்பதோர் முத்துரி யத்துறச்
செம்பாற் சிவமாதல் சித்தாந்த சித்தியே

33: சுத்தாசுத்தம்

2546
நாசி நுனியினின் நான்குமு விரலிடை
ஈசன் இருப்பிடம் யாரும் அறிகிலர்
பேசி யிருக்கும் பெருமறை யம்மறை
கூசி யிருக்குங் குணமது வாமே

2547
கருமங்கள் (1)ஒன்று கருதுங் கருமத்
துரிமையுங் கன்மமும் முன்னும் பிறவிக்
கருவினை யாவது கண்டகன் றன்பிற்
புரிவன கன்மக் கயத்துட் புகுமே
(1) ஒன்றுட்

2548
மாயை மறைக்க மறைந்த மறைப்பொருள்
மாயை மறைய வெளிப்படும் அப்பொருள்
மாயை மறைய மறையவல் லார்கட்குக்
காயமும் இல்லை கருத்தில்லை தானே

2549
மோழை யடைந்து முழைதிறந் துள்புக்குக்

கோழை யடைகின்ற தண்ணற் குறிப்பினில்
ஆழ அடைந்தங் கனலிற் புறஞ்செய்து
தாழ அடைப்பது தன்வலி யாமே

2550
காயக் குழப்பனைக் காயநன் னாடனைக்
காயத்தி னுள்ளே கமழ்கின்ற நந்தியைத்
தேயத்து ளே(1)யெங்குந் தேடிந் திரிவர்கள்
காயத்துள் நின்ற கருத்தறி யாரே
(1) யென்றுந் தேடித் திரிபவர்

2551
ஆசூசம் ஆசூசம் என்பார் அறிவிலார்
ஆசூச மாமிடம் ஆரும் அறிகிலார்
ஆசூச மாமிடம் ஆரும் அறிந்தபின்
ஆசூச மானிடம் ஆசூச மாமே

2552
ஆசூச மில்லை அருநிய மத்தருக்
காசூச மில்லை அரனைஅர்ச் சிப்பவர்க்
காசூச மில்லையாம் அங்கி வளர்ப்போர்க்
காசூச மில்லை அருமறை ஞானிக்கே

2553
வழிபட்டு நின்று வணங்கு மவர்க்குச்
சுழிபட்டு நின்றதோர் தூய்மை தொடங்குந்

குழிபட்டு நின்றவர் கூடார் குறிகள்
கழிபட் டவர்க்கன்றிக் காணவொண் ணாதே

2554
தூய்மணி தூயனல் தூய ஒளிவிடுந்
தூய்மணி தூயனல் தூரறி வாரில்லை
தூய்மணி தூயனல் தூரறி வார்கட்குத்
தூய்மணி தூயனல் தூயவு மாமே

2555
தூயது வாளா வைத்தது தூநெறி
தூயது வாளா நாதன் திருநாமந்
தூயது வாளா அட்டமா சித்தியுந்
தூயது வாளாத் தூயடிச் சொல்லே

2556
பொருளது வாய்நின்ற புண்ணியன் எந்தை
அருளது போற்றும் அடியவ ரன்றிச்
சுருளது வாய்நின்ற துன்பச் சுழியின்
மருளது வாச்சிந்தை மயங்குகின் றாரே

2557
வினையா மசத்து விளைவ துணரார்
வினைஞானந் தன்னில் வீடலுந் தேரார்
வினைவிட வீடென்னும் வேதமும் ஓதார்
வினையாளர் மிக்க விளைவறி யாரே

34: முத்திநிந்தை(1)

(1) மோக்ஷநிந்தை

2558

பரகதி யுண்டென இல்லையென் போர்கள்
நரகதி செல்வது ஞாலம் அறியும்
இரகதி செய்திடு வார்கடை தோறுந்
துரகதி யுண்ணத் தொடங்குவர் தாமே

2559

கூடகில் லார்குரு வைத்த குறிகண்டு
நாடகில் லார்நயம் பேசித் திரிவர்கள்
பாடகில் லாரவன் செய்த பரிசறிந்
தாடவல் லாரவர் (1)பேறெது வாமே
(1) பேறிது

2560

புறப்பட்டுப் போகும் புகுதுமென் னெஞ்சில்
திறப்பட்ட சிந்தையைத் தெய்வமென் றெண்ணி
அறப்பட்ட மற்றப் பதியென் றழைத்தென்

இறப்பற் றி னேன் இங் கிதென்னென்கின் றானே

2561
திடரிடை நில்லாத நீர்போல் ஆங்கே
உடலிடை நில்லா உறுபொருள் காட்டிக்
கடலிடை நில்லாக் கலஞ்சேரு மாபோல்
அடலெரி வண்ணனும் அங்குநின் றானே

2562
தாமரை நூல்போல் தடுப்பார் பரத்தொடும்
போம்வழி வேண்டிப் புறமே யுழிதர்வர்
காண்வழி காட்டக்கண் காணாக் கலதிகள்
தீநெறி செல்வான் திரிகின்ற வாறே

2563
முடுதல் இன்றி முடியும் மனிதர்கள்
கூடுவர் நந்தி யவனைக் குறித்துடன்
காடும் மலையுங் கழனி கடந்தோறும்
ஊடும் உருவினை யுன்னகி லாரே

2564
ஆவது தெற்கும் வடக்கும் அமரர்கள்
போவர் குடக்குங் குணக்குங் குறிவழி
நாவினின் மந்திர (1)மென்று நடுவங்கி
வேவது செய்து விளங்கிடு (2)வீரே
(1) மொன்று

(2) நீரே

2565
மயக்குற நோக்கினும் மாதவஞ் (1)செய்யார்
தமக்குறப் பேசின தாரணை கொள்ளார்
சினக்குறப் பேசின தீவினை யாளர்
தமக்குற வல்வினை தாங்கிநின் றாரே
(1) செய்வார்

## 35: இலக்கணாத் திரயம்

2566
விட்ட விலக்கணை தான்போம் (1)வியோமத்துத்
தொட்டு விடாத துபசாந்தத் தேதொகும்
விட்டு விடாதது மேவுஞ்சத் தாதியிற்
சூட்டு மிலக்கணா தீதஞ் சொரூபமே
(1) வியமத்துத்

2567
வில்லின் விசைநாணிற்கோத்திலக்கெய்தபின்
கொல்லுங் களிறைந்துங் கோலொடு சாய்ந்தன

வில்லு ளிருந்நெறி கூரும் ஒருவற்குக்
கல்கலன் என்னக் கதிரேதி ராமே

## 36: தத்துவமசி வாக்கியம்

2568
சீவ துரியத்துத் தொம்பதஞ் சீவனார்
தாவு பரதுரி யத்தினில் தற்பதம்
மேவு சிவதுரி யத்தசி மெய்ப்பத
மோவி விடுந்தத் துவமசி உண்மையே

2569
ஆறா றகன்ற அணுத்தொம் பதஞ்சுத்தம்
ஈறான தற்பதம் எய்துப சாந்தத்துப்
பேறா கியசீவன் நீங்கிப்பிர சாதத்து
வீறான தொந்தத் தசிதத்வ மசியே

2570
ஆகிய வச்சோயந் தேவதத் தன்னிடத்
தாகிய விட்டு விடாத விலக்கணைத்
(1)தாருப சாந்தமே தொந்தத் தசியென்ப

ஆகிய சீவன் பரன்சிவ னாமே
(1) தாகும் பதார்த்தமே

2571
(1)துவந்தத் தசியே தொந்தத் தசியும்
அவைமன்னா வந்து வயத்தேக மான
தவமுறு தத்துவ மசிவே தாந்த
(2)சிவமா மதுஞ்சித் தாந்தவே தாந்தமே
(1) துவம்சித்தசியே தொந்தத் தசியும்
(2) சிவமாகும் தொம்மசி சித்தாந்த வேதமே

2572
துரியம் அடங்கிய சொல்லறும் பாழை
அரிய பரமென்ப ராகாரி தன்றென்னார்
உரிய பரம்பர மாமொன் றுதிக்கும்
அருநிலம் என்பதை யாரறி வாரே

2573
தொம்பதந் தற்பதஞ் சொல்லும் அசிபதம்
நம்பிய முத்துரி யத்துமே னாடவே
யும்பத மும்பத மாகும் உயிர்பரன்
செம்பொரு ளான சிவமென லாமே

2574
வைத்த துரிய மதிற்சொரு பானந்தத்
துய்த்த பிரணவ மாமுப தேசத்தை

மெய்த்த விதயத்து விட்டிடு மெய்யுணர்
வைத்த படியே யடைந்துநின் றானே

2575

நனவாதி ஐந்தையும் நாதாதியில் வைத்துப்
பினமா மலத்தைப் பின்வைத்துப் பின்சுத்தத்
தனதாஞ் சிவகதி சத்தாதி சாந்தி
மனவா சகங்கெட்ட மன்னனை நாடே

2576

பூரணி யாது புறம்பொன்றி லாமையின்
பேரணி யாதது பேச்சொன்றி லாமையில்
ஓரணை யாதது வொன்றுமி லாமையிற்
காரண மின்றியே காட்டுந் தகைமைத்தே

மகா வாக்கியம்

2577

நீயது வானா யெனநின்ற பேருரை
ஆயது நானானேன் என்னச் சமைந்தறச்
சேய சிவமாக்குஞ் சீர்நந்தி பேரருள்
ஆயது வாயனந் தானந்தி யாகுமே

2578

உயிர்பர மாக உயர்பர சீவன்
அரிய சிவமாக அச்சிவ வேதத்
திரியிலுஞ் சீராம் பராபரன் என்ன
உரிய உரையற்ற வோமய மாமே

2579

வாய்நாசி யேபுரு மத்தகம் உச்சியில்
ஆய்நாசி யுச்சி முதலவை யாய்நிற்குந்
தாய்நாடி யாதிவாக் காதி சகலாதி
சேய்நா டொளியெனச் சிவகதி யைந்துமே

2580

அறிவறி யாமை இரண்டு மகற் றிச்
செறிவறி வாய் எங்கும் நின்ற சிவனைப்
பிறிவறி யாது பிரானென்று பேணுங்
குறியறி யாதவர் கொள்ளறி யாரே

2581

அறிவார் அறிவன அப்பும் அனலும்
அறிவார் அறிவன அப்புங் கலப்பும்
அறிவான் இருந்தங் கறிவிக்கி னல்லால்
அறிவான் அறிந்த அறிவறி யோமே

2582

அதீதத்துள் ளாகி அகன்றவன் நந்தி
அதீதத்துள் ளாகி அறிவிலோன் ஆன்மா
மதிபெற் றிருள்விட்ட மன்னுயி ரொன்றாம்
பதியிற் பதியும் பரவுயிர் தானே

2583
அடிதொழ முன்னின் றமரர்க ளத்தன்
முடிதொழ ஈசனும் முன்னின் றருளிப்
படிதொழ நீபண்டு பாவித்த தெல்லாங்
கடிதொழக் காணென்னுங் கண்ணுத லானே

2584
நின்மல மேனி நிமலன் பிறப்பிலி
எந்நுளம் வந்திவன் என்னடி யானென்று
பொன்வளர் மேனி புகழ்கின்ற வானவன்
நின்மல மாகென்று நீக்கவல் லானே

2585
துறந்துபுக் கொள்ளொளி சோதியைக் கண்டு
பறந்ததென் உள்ளம் பணிந்து கிடந்தே
மறந்தறி யாவென்னை வானவர் கோனும்
இறந்து பிறவாமல் ஈங்குவைத் தானே

2586
மெய்வாய் கண்முக்குச் செவியென்னும் மெய்த்தோற்றத்
தவ்வாய அந்தக் கரணம் அகிலமும்

எவ்வா யியுரும் இறையாட்ட ஆடலாற்
கைவா யிலாநிறை எங்குமெய் கண்டதே

## 37: விசுவக் கிராசம்

2587
அழிகின்ற சாயா புருடனைப் போலக்
கழிகின்ற நீரிற் குமிழியைக் காணில்
எழுகின்ற தீயிற்கர்ப் பூரத்தை யொக்கப்
பொழிகின்ற இவ்வுடற் போமப் பரத்தே

2588
உடலும் உயிரும் ஒழிவற ஒன்றிற்
படருஞ் சிவசத்தி தாமே பரமாம்
உடலைவிட் டிந்த உயிரெங்கு மாகிக்
கடையுந் தலையுங் கரக்குஞ் சிவத்தே

2589
செவிமெய்வாய் கண்முக்குச் சேரிந் திரியம்
அவியின் றியமன மாதிகள் ஐந்துங்
குவிவொன் றிலாமல் விரிந்து குவிந்து

தவிர்வொன் றிலாத சராசரந் தானே

2590

பரனெங்கு மாரப் பரந்துற்று நிற்குந்
திரனெங்கு மாகிச் செறிவெங்கு மெய்தும்
உரனெங்கு மாயுல குண்டு உமிழ்க்கும்
வரமிங்ஙன் கண்டியான் வாழ்ந்துற்ற வாறே

2591

அளந்து துரியத் தறிவினை வாங்கி
உளங்கொள் பரஞ்சகம் உண்ட தொழித்துக்
கிளர்ந்த பரஞ்சிவஞ் சேரக் கிடைத்தால்
விளங்கிய வெட்ட வெளியனு மாமே

2592

இரும்பிடை நீரென என்னையுள் வாங்கிப்
பரம்பர மான பரமது விட்டே
உரம்பெற முப்பாழ் ஒளியை விழுங்கி
இருந்தஎன் நந்தி இதயத்து ளானே

2593

கரியுண் விளவின் கனிபோல் உயிரும்
உரிய பரமுமுன் னோதுஞ் சிவமும்
அரிய துரியமேல் அகிலமும் எல்லாந்
திரிய விழுங்குஞ் சிவபெரு மானே

2594

அந்தமும் ஆதியும் ஆகும் பராபரன்
தந்தம் பரம்பரன் தன்னிற் பரமுடன்
நந்தமை யுண்டுமெய்ஞ் ஞானநே யாந்தத்தே
நந்தி யிருந்தனன் நாமறி யோமே

## 38: வாய்மை

2595

அற்ற துரைக்கில அருளுப தேசங்கள்
குற்ற மறுத்தபொன் போலுங் கனலிடை
அற்றற வைத்திறை மாற்றற ஆற் றிடில்
செற்றம் அறுத்த செழுஞ்சுட ராகுமே

2596

எல்லாம் அறியும் அறிவு தனைவிட்டு
எல்லாம் அறிந்தும் இலாபமங் கில்லை
எல்லாம் அறிந்த (1)அறிவினை நானென்னில்
எல்லாம் அறிந்த இறையென லாமே
(1) அறிவனை

2597

தலைநின்ற தாழ்வரை மீது தவஞ்செய்து
முலைநின்ற மாதறி மூர்த்தியை யானும்
புலைநின்ற பொல்லாப் பிறவி கடந்து
கலைநின்ற கள்வனைக் கண்டுகொண் டேனே

2598

தானே யுலகில் தலைவ னெனத்தகுந்
தானே யுலகுக்கோர் தத்துவ மாய்நிற்கும்
வானே மழைபொழி மாமறை கூர்ந்திடும்
ஊனே யுருகிய வுள்ளமொன் றாமே

2599

அருள்பெற்ற காரணம் என்கொல் அமரில்
இருளற்ற சிந்தை இறைவனை நாடி
மருளுற்ற சிந்தையை மாற் றி அருமைப்
பொருளுற்ற சேவடி போற்றுவர் தாமே

2600

மெய்கலந் தாரொடு மெய்கலந் தாந்தன்னைப்
பொய்கலந் தார்முன் புகுதா ஒருவனை
உய்கலந் தூழித் தலைவனுமாய் நிற்கும்
மெய்கலந் தின்பம் விளைந்திடும் மெய்யர்க்கே

2601

மெய்கலந் தாரொடு மெய்கலந் தான்மிகப்

பொய்கலந் தாருட் புகுதாப் புனிதனைக்
கைகலந் தாவி எழுபொழு தண்ணலைக்
கைகலந் தார்க்கே கருத்துற லாமே

2602
எய்திய காலத் திருபொழு துஞ்சிவன்
மெய்செயின் மேலை விதியது வாய்நிற்கும்
பொய்யும் புலனும் புகலொன்று நீத்திடில்
ஐயனும் அவ்வழி யாகிநின் றானே

2603
எய்துவ தெய்தா தொழிவ திதுவருள்
உய்ய அருள்செய்தான் உத்தமன் சீர்நந்தி
பொய்செய்புலன் நெறியொன்பதுந்தாட்கொளின்
மெய்யென் புரவியை மேற்கொள்ள லாமே

2604
கைகலந் தானைக் கருத்தினுள் நந்தியை
மெய்கலந் தான்தன்னை வேத முதல்வனைப்
பொய்கலந் தார்முன் புகுதாப் புனிதனைப்
பொய்யொழிந் தார்க்கே புகலிட மாமே

2605
மெய்த்தாள் அகம்படி மேவிய நந்தியைக்
கைத்தாள் கொண்டாருந் திறந்தறி வாரில்லை
பொய்த்தாள் இடும்பையைப் பொய்யற நீவிட்டங்

(1)கத்தாள் திறக்கில் அரும்பேற தாமே
(1) கைத்தாள்

2606

உய்யும் வகையால் உணர்வினால் ஏத்துமின்
மெய்யன் அரனெறி மேலுண்டு திண்ணெனப்
பொய்யொன்று மின்றிப் புறம்பொலி வார்நடு
ஐயனும் அங்கே அமர்ந்துநின் றானே

2607

வம்பு பழுத்த (1)மலர்ப்பழம் ஒன்றுண்டு
தம்பாற் பறவை புகுந்துணத் தானொட்டா
தம்புகொண் டெய்திட் டகலத் (2)துரத்திடிற்
செம்பொற் சிவகதி சென்(3)றெய்த லாமே
(1) பலாப்பழம்
(2) துரந்திடிற்
(3) றெய்தலுமாமே

2608

மயக்கிய ஐம்புலப் பாசம் அறுத்துத்
துயக்கறுத் தானைத் தொடர்மின்தொடர்ந்தால்
தியக்கஞ்செய் யாதே சிவனெம் பெருமான்
உயப்போ எனமனம் ஒன்றுவித் தானே

2609

மனமது தானே நினையவல் லாருக்

கினமெனக் கூறு மிருங்காய மேவற்
றனிவினி னாதன்பால் தக்கன செய்யில்
புனிதன் செயலாகும் போதப் புவிக்கே

39: ஞானிசெயல்

2610
முன்னை (1)வினைவரின் முன்னுண்டே நீங்குவர்
பின்னை வினைக்கணார் பேர்ந்தறப் பார்ப்பர்கள்
தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்
நன்மையில் ஐம்புலன் நாடலி னாலே
(1) நிலைவரின்

2611
தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே

2612
மனவாக்குக் காயத்தால் வல்வினை மூளும்

மனவாக்கு நேர்நிற்கில் வல்வினை மன்னா
மனவாக்குக் கெட்டவர் வாதனை தன்னால்
தனைமாற் றி யாற்றத் தகுஞானி தானே

## 40: அவாவறுத்தல்

2613
வாசியு மூசியும் பேசி வகையினால்
பேசி யிருந்து பிதற் றிப் பயனில்லை
ஆசையும் அன்பும் அறுமின் அறுத்தபின்
ஈசன் இருந்த இடம் எளி தாமே

2614
மாடத்து ளானலன் மண்டபத் தானலன்
கூடத்து ளானலன் கோயிலுள் ளானலன்
வேடத்து ளானலன் வேட்கைவிட் டார்நெஞ்சில்
மூடத்து ளேநின்று முத்திதந் தானே

2615
ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்

ஆசை படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாமே

2616
அடுவன பூதங்கள் ஐந்தும் உடனே
(1)படுவழி செய்கின்ற பற்றற வீசி
விடுவது வேட்கையை மெய்ந்நின்ற ஞானந்
தொடுவது தம்மைத் தொடர்தலு மாமே
(1) படுபழி

2617
உவாக்கடல் ஒக்கின்ற வூழியும் போன
துவாக்கட லுட்பட்டுத் துஞ்சினர் வானோர்
அவாக்கட லுட்பட் டழுந்தினர் மண்ணோர்
தவாக்கடல் ஈசன் தரித்துநின் றானே

2618
நின்ற வினையும் பிணியும் நெடுஞ்செயல்
(1)துன்தொழி லற்றுச் சுத்தம தாகலும்
பின்றைங் கருமமும் பேர்த்தருள் நேர்பெற்றுத்
துன்ற அழுத்தலும் ஞானிகள் தூய்மையே
(1) உன்தொழி

2619
உண்மை யுணர்ந்துற ஒண்சித்தி முத்தியாம்
பெண்மயற் கெட்டறப் பேறட்ட சித்தியாந்

திண்மையின் ஞானி சிவகாயங் கைவிட்டால்
வண்மை யருள்தான் (1)அடைந்தன்பில் ஆறுமே
(1) அடைந்தபின்

2620
அவனிவன் ஈசனென் றன்புற நாடிச்
சிவனிவன் ஈசனென் றுண்மையை யோரார்
பவனிவன் பல்வகை யாமிப் பிறவி
புவனிவன் போவது பொய்கண்ட போதே

2621
கொதிக்கின்ற வாறுங் குளிர்கின்ற வாறும்
பதிக்கின்ற வாறிந்தப் பாரக முற்றும்
விதிக்கின்ற ஐவரை வேண்டா துலகம்
நொதிக்கின்ற காயத்து நூலொன்று மாமே

2622
உய்ந்தனம் என்பீர் உறுபொருள் காண்கிலீர்
கந்த மலரிற் கலக்கின்ற நந்தியைச்
(1)சிந்தையில் வைத்துத் தெளிவுறச் சேர்த்திட்டால்
முந்தைப் பிறவிக்கு மூலவித் தாமே
(1) சிந்தை யுறவே தெளிந்திருள் நீங்கினால்

## 41: பத்தியுடைமை

2623

முத்திசெய் ஞானமுங் கேள்வியு மாய்நிற்கும்
அத்தனை மாயா அமரர் பிரான்தனைச்
சுத்தனைத் தூய்நெறி யாய்நின்ற சோதியைப்
பத்தர் பரசும் பசுபதி தானென்றே

2624

அடியார் அடியார் (1)அடியார்க் கடிமைக்
கடியனாய் நல்கிட் டடிமையும் பூண்டேன்
அடியார் அருளால் அவனடி கூட
அடியா னிவனென் றடிமைகொண் டானே
(1) அடியாரடிமைக்

2625

நீரிற் குளிரும் நெருப்பினிற் சுட்டிடும்
ஆரிக் கடனந்தி யாமா ரறிபவர்
பாரிற் (1)பயனாரைப் பார்க்கிலும் நேரியர்
ஊரில் உமாபதி யாகிநின் றானே
(1) பயனாகும்

2626

ஒத்துல கேழும் அறியா ஒருவனென்

றத்தன் இருந்திடம் ஆரறி வார்சொல்லப்
பத்தர்தம் பத்தியிற் (1)பாற்படில் அல்லது
முத்தினை யார்சொல்ல முந்துநின் றாரே
(1) பாற்படல்

2627
ஆன்கன்று தேடி யழைக்கு மதுபோல்
நான்கன்றாய் நாடி யழைத்தேனென் நாதனை
வான்கன்றுக் கப்பாலாய் நின்ற மறைப்பொருள்
ஊன்கன்றா னாடிவந் துள்புகுந் தானே

2628
பெத்தத்துந் தன்பணி இல்லை பிறத்தலான்
முத்தத்துந் தன்பணி இல்லை முறைமையால்
அத்தற் கிரண்டும் அருளால் அளித்தலாற்
பத்திப்பட் டோர்க்குப் பணியொன்றும் இல்லையே

2629
பறவையிற் கற்பமும் பாம்புமெய் யாகக்
குறவஞ் சிலம்பக் குளிர்வரை யேறி
நறவார் மலர்கொண்டு நந்தியை யல்லால்
இறைவனென் றென்மனம் ஏத்தகி லாவே

2630
உறுதுணை நந்தியை உம்பர் பிரானைப்
பெறுதுணை செய்து பிறப்பறுத் துய்மின்

(1)செறிதுணை செய்து சிவனடி சிந்தித்
துறுதுணை யாயங்கி யாகிநின் றானே
(1) செறுதுணை

2631
வானவர் தம்மை வலிசெய் திருக்கின்ற
தானவர் முப்புரஞ் செற்ற தலைவனைக்
கானவன் என்றுங் கருவரை யானென்றும்
ஊனத னுள்நினைந் தொன்றுபட் டாரே

2632
நிலைபெறு கேடென்று முன்னே படைத்த
தலைவனை நாடித் தயங்குமென் உள்ளம்
மலையுளும் வானகத் துள்ளும் புறத்தும்
உலையுளும் உள்ளத்து முழ்கிநின் றேனே

42: முத்தியுடைமை

2633
முத்தியில் அத்தன் முழுத்த அருள்பெற்றுத்
தத்துவ சுத்தி தலைப்பட்டுத் தன்பணி

மெய்த்தவஞ் செய்கை வினைவிட்ட மெய்யுண்மைப்
பத்தியி லுற்றோர் பரானந்த போதரே

2634
வளங்கனி தேடிய வன்றாட் பறவை
உளங்கனி தேடி யுழிதரும் போது
களங்கனி யங்கியிற் கைவிளக் கேற் றி
நலங்கொண்ட நால்வரும் நாடுகின் றாரே

## 43: சோதனை

2635
பெம்மான் பெருநந்தி பேச்சற்ற பேரின்பத்
தம்மா னடிதந் தருட்கடல் ஆடினோம்
எம்மாய மும்விடுத் தெம்மைக் கரந்திட்டுச்
சும்மா திருந்திடஞ் சோதனை யாகுமே

2636
அறிவுடை யானரு மாமறை யுள்ளே
செறிவுடை யான்மிகு தேவர்க்குந் தேவன்
பொறியுடை யான்புலன் ஐந்துங் கடந்த

குறியுடை யானொடுங் கூடுவன் நானே

2637
அறிவறி வென்றங் கரற்றும் உலகம்
அறிவறி யாமையை யாரும் அறியார்
அறிவறி யாமை கடந்தறி வானால்
அறிவறி யாமை யழகிய வாறே

2638
குறியாக் (1)குறியினிற் கூடாத கூட்டத்
தறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய்
நெறியாம் பராநந்தி நீடருள் ஒன்றுஞ்
செறியாச் செறிவே சிவமென லாமே
(1) குறிப்பினிற்

2639
காலினில் ஊறுங் கரும்பினிற் கட்டியும்
பாலினுள் நெய்யும் (1)பழத்துள் இரதமும்
பூவினுள் நாற்றமும் போலுளன் எம்மிறை
காவலன் எங்குங் கலந்துநின் றானே
(1) பழத்தின்

2640
விருப்பொடு கூடி விகிர்தனை நாடிப்
பொருப்பகஞ் சேர்தரு பொற்கொடி போல
இருப்பர் மனத்திடை எங்கள் பிரானார்

நெருப்புரு வாகி நிகழ்ந்துநின் றாரே

2641
நந்தி பெருமான் நடுவுள் வியோமத்து
வந்தென் அகம்படி கோயில்கொண் டான்(1)கொள்ள
எந்தைவந் தானென் றெழுந்தேன் எழுதலுஞ்
சிந்தையி னுள்ளே சிவனிருந் தானே
(1) சொன்ன

2642
தன்மைவல் லோனைத் தவத்துள் நலத்தினை
நன்மைவல் லோனை நடுவுறை நந்தியைப்
புன்மைபொய் யாதே புனிதனை நாடுமின்
பன்மையில் உம்மைப் பரிசுசெய் வானே

2643
தொடர்ந்துநின் றானென்னைச் சோதிக்கும் போது
தொடர்ந்துநின் றானல்ல நாதனும் அங்கே
படர்ந்துநின் றாதிப் பராபரன் எந்தை
கடந்துநின் றவ்வழி காட்டுகின் றானே

2644
அவ்வழி காட்டும் அமரர்க் கரும்பொருள்
இவ்வழி தந்தை தாய்(1)கேளியான் ஒக்குஞ்
செவ்வழி சேர்சிவ லோகத் திருந்திடும்
இவ்வழி நந்தி இயல்பது தானே

(1) தாயாய்

2645

எறிவது ஞானத் (1)துறைவாள் உருவி
அறிவது னோடேயவ் வாண்டகை யானைச்
செறிவது தேவர்க்குத் தேவர் பிரானைப்
பறிவது பல்கணப் பற்றுவி டாரே
(1) திறைவாள்

2646

ஆதிப் பிரான்தந்த வாளங்கைக்கொண்டபின்
வேதித்து என்னை விலக்கவல் லாரில்லை
சோதிப்பன் அங்கே சுவடு படாவண்ணம்
ஆதிக்கட் டெய்வ மவனிவ னாமே

2647

அந்தக் கருவை (1)யருவை வினைசெய்தற்
பந்தம் பணியச்சம் பல்பிறப் பும்வாட்டிச்
சிந்தை திருத்தலுஞ் சேர்ந்தாரச் சோதனை
சந்திக்கத் தற்பர மாகுஞ் சதுரர்க்கே
(1) யருவினை செயலப்

2648

உரையற்ற தொன்றை யுரைத்தான் எனக்குக்
கரையற் றெழுந்த கலைவேட் டறுத்துத்
திரையொத்த என்னுடல் நீங்கா திருத்திப்

புரையற்ற என்னுட் புகுந்தற் பரனே

எட்டாம் தந்திரம் முற் றிற்று

திருச்சிற்றம்பலம்

Send corrections To saran@geocities.com

www.shaivism.org